'பதிவுகள்' 95 கவிதைகள்

(தொகுதி இரண்டு)

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்"

"அனைவருடனும் அறிவினைப் பகிர்ந்து கொள்வோம்" என்பதைத்தாரக மந்திரத்துடன், எழுத்தாளர் வ.ந.கிரிதரனை ஆசிரியராகக்கொண்டு மார்ச் 2000 ஆம் ஆண்டிலிருந்து வெளியாகும் இணைய இதழ் 'பதிவுகள்' (பதிவுகள்.காம்). 'பதிவுகள்' இணைய இதழில் வெளியான கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் மின்னூற் தொகுப்புகளாக வெளியாகும். இது அவ்வகையில் வெளியாகும் இரண்டாவது கவிதைத்தொகுப்பு.

'பதிவுகள்.காம்' வெளியீடு!

அக்டோபர் 2020

பதிவுகள் © 2020

உள்ளே..

1. மௌனக் குதிரையின் குளம்படிச் சத்தம்! - நாகூர் ரூமி -
2. நிம்மதி - நாகூர் ரூமி -
3. அந்தப் பேனா... - மஞ்சு ரெங்கனாதன்
4. அம்மா என் அருகில்! - திருமதி.ரஜினி பெத்துராஜா (ராஜபாளையம்.) -
5. புலத்தில் இருந்து ஒரு கடிதம்...! - கவிஞர் த.சரீஷ் (பாரீஸ்) -
6. கடைசியாக ஒரு கடிதம்...! - கவிஞர் த.சரீஷ் (பாரீஸ்) -
8. நிலவே என்னிடம் - சத்தி சக்திதாசன் -
9. காதலுக்குச் சவால் - சத்தி சக்திதாசன் -
10. தும்பி விட்டுச் சென்ற எச்சத்தைப் பற்றியும் - தாஜ்
11. அன்புடன் - தாஜ் -
12. விழிப்புணர்வு - தாஜ் -
13. வேர்த்தாலி தொலைத்த கள்ளிப் பூ! - திலகபாமா (சிவகாசி) -
14. கல்லறை வாழ்க்கை... - அ.ரமேஷ் அரவிந்தன் -
15.கிணற்றுத் தவளைகள்! - வ.ந.கிரிதரன் -
16. தேடல்கள்! -- வ.ந.கிரிதரன் -
17. எங்கள் கிராமத்து ஞானபீடம் 1! - -- நா.முத்து நிலவன் --
18. எங்கள் கிராமத்து ஞானபீடம் 2 -- நா.முத்து நிலவன் --
19. நீ என் வண்ணத்துப்பூச்சி! - இளங்கோ -
20. விளம்பரம்(அல்ல) - கரவைதாசன் -
21. இணக்கு! - கரவைதாசன் -
22. கடற்கோள்! - வ.ஐ.ச.ஜெயபாலன்-
23. அலைப் போர்! - ரவி (சுவிஸ்) -
24. கடலுக்கு மடல் 1 - கோவி.கண்ணன் (சிங்கப்பூர்) -
25. கடலுக்கு மடல் 2 - கோவி.கண்ணன் (சிங்கப்பூர்) -
26 கடல் பூகம்பத்தில் எமனாய் எழுந்த பூத அலைகள்! - சி. ஜெயபாரதன், கனடா -
27. பேரலை - காருண்யன் -
28. உலக பெண்கள் தினம்: பங்குனி 8! நலங்கெடப் புழுதியில்..... பாரதி (ஜேர்மனி) -
29. உள்ளே ஒரு வானவில்! - வைகைச் செல்வி-
30. சிறு சோடிப் பாதங்களுக்கு ஒரு சலங்கை - சாரங்கா தயானந்தன் -
31. அதீத வாழ்வு! - சாரங்கா தயானந்தன்-
32. வாசல்! - நெப்போலியன் (சிங்கப்பூர்) -
33. வேலிகள்! - ஈழநாதன் -
34. நிழல் நெசவாளர்கள்! - பிச்சினிக்காடு இளங்கோ -
35. கழுதைகளுக்குத் தெரியுமா...... - நெப்போலியன் (சிங்கப்பூர்) -
36. கா-க்-கை! - மொனிக்கா (நியூயோர்க்) -
37. உழவு! - ஈழநாதன் -
38. இயற்கையொன்றி இருத்தல்! - - வ.ந.கிரிதரன் -
39. நோதலற்ற காதலுக்காய்.... - - வேதா இலங்காதிலகம் (டென்மார்க்) -
(40 -53) குர்திஸ் கவிதைகள்! தமிழில்: யமுனா ராஜேந்திரன்

பதிவுகள் © 2020

- 40. அம்மா நீ குளிர்பருவமல்லவே! - கமால் மிராவ்தலி , யமுனா ராஜேந்திரன்
- 41. நாம் வாழும் காலம்! - லத்தீப் அஹ்மத் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 42. நிலம்! - ஸெர்கே பேகஸ் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 43. கற்கள்! - லத்தீப் அல்மத் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 44. விழிப்பு! - அப்துல்லா பெஸ தமிழில்: யமுனா ராஜேந்திரன்
– 45. விதைகள்! - ஸெர்கே பேகஸ் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
– 46. .ஓரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்! - மெஹ்ரம் அஸ்லம் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 47 . ஜனனம்! - ரபீக் ஸபீர் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 48 என்றாலும்! - லத்தீப் ஹல்மத் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 49 .ஒரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்! - மெஹ்ரம் அஸ்லம் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 50.வைகறை! - கமால் மிராவ்தலி தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 51 கார்னவெல்லி குன்றுகள்: - அடையாளமற்ற கெரில்லா பெண்கவி தமிழில்: யமுனா ராஜேந்திரன்
– 52. எனது நகரம்! - அஸாத் தில்ஸார் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

–

– 53.எனது நகரம்! - அஸாத் தில்ஸார் தமிழில்: யமுனா ராஜேந்திரன்
- 54 அடையாளமற்ற போராளி - அப்துல்லா பெஸ தமிழில்: யமுனா ராஜேந்திரன்
(55 - 65) கோநா கவிதைகள்
66. சபிக்கப்பட்ட உலகு - -துவாரகன்-
67. இரவின் நிழல் - சோ.சுப்புராஜ் -
68. அத்தனைக்கு மத்தியிலும் “I am fine" - மன்னார் அமுதன்
69. இதயத்தின் மொழியில் உன்னிடம்! - காளி நேசன் -
70. யுத்தத்தில் தொலைந்து போன எனது மாணவன் -துவாரகன்-
71. எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை - -நடராஜா முரளிதரன் -
72 .சூறாவளியின் பாடல்! - - எம்.ரிஷான் ஷெரீப் -
73 நீ இல்லாத அறை புழுக்கமாயிருக்கிறது - நட்சத்ரவாசி
74. தீக்குஞ்சுகள் -நட்சத்ரவாசி
75 யாரோ போட்டு முடித்து தானமாகக் கிடைத்த இரவுச் சட்டை - துவாரகன்
76. வெறுமொரு சலனம் - நட்சத்திரவாசி -
76 சருகல்ல இவனென்று சாற்று - நட்சத்திரவாசி -
78. என்னவள் ஒரு தேவதை - 1 ராம்ப்ரசாத் (சென்னை)
79. பாவலர் பாரதியார் நினைவேந்தி...! - தமிழநம்பி -
80. மனிதம் அற்ற மானுடம் - ப.மதியழகன் -
81. ஞானக்குயில் - ப.மதியழகன் -
82. குறிப்பெழுதுங்கள் - ராம்ப்ரசாத்
83. புத்தக மயிலிறகாய்ப் பொத்திய... - வேதா இலங்காதிலகம் (ஓகுஸ், டென்மார்க்) -
84. ரூசோவின் கவிதையொன்று!
85. விரிகின்ற தாமரையோ - சக்தி சக்திதாசன்
86. யாதுமாகி - ப.மதியழகன் -
87. சுந்தரக் கனகநிலா - வார்த்தைகள். - வேதா இலங்காதிலகம் (ஓகுஸ், டென்மார்க்)

88. நகரத்துப் புறாவும், நானும்! - வ.ந.கிரிதரன் -
89.. நாங்க கூட... - சு.திரிவேணி,கொடுமுடி -
90. உயிர் பிழைத்திருப்பதற்காக.... - சோ.சுப்புராஜ் -
91. பிழைப்படிமங்கள்...- ராம்ப்ரசாத் சென்னை -
92. நேசமென்னும் தென்றல்வர நெஞ்சத்தை திறந்திடுவோம்...!! - கவிஞர் பொத்துவில் அஸ்மின் -
93. வேர்களே நீவீர் காலம் வரும் வரை கலங்காதிருப்பீர்! - மட்டுவில் ஞானக்குமாரன் (இலங்கை) -
94. செம்மொழி பேணுவோம் எழுவீர் - காரையூர்க் கவிஞர் (கனடா)-
95.. கனவுதானா தோழா ! - சக்தி -

1. மௌனக் குதிரையின் குளம்படிச் சத்தம்! - நாகூர் ரூமி -

நீ பதுக்கி வைத்திருக்கும் பொக்கிஷங்கள்
என் கற்பனைக்கு எட்டாதவை

உன் நாணப் போர்வையின் அழகு
கிறங்க வைக்கிறது என்னை

உன் அசைவுகளில் தோற்றுப் போகின்றன
அகராதிகள்

மௌனத் தாய்ப்பால் குடித்து
மௌனச் சோற்றையே உண்டு வளர்ந்த உன்
சிப்பி பூட்டிய எண்ண முத்து ஒன்றை எடுப்பதற்குள்
ஓராயிரம் சிப்பிகளை நான் உடைக்க வேண்டியிருந்தது

பிறகு வந்த அந்த மாலைக்கும்
அந்த குளிருக்கும்
என் முகம் புதைக்க அனுமதித்த
உன் கழுத்துக்கும்
எப்படிச் சொல்வேன் நன்றி?

உன் கழுத்தின் கதகதப்புப் புதையல்
கடுகளவும் தீரவில்லை
காலம் காலமாய்

நட்சத்திரங்கள் உறங்கின
என் முத்தத் தாலாட்டில்
மூடிய உன் இமைகளின் கீழே

ஒரு நாள்
தொழுது முடித்தவுடன்
நீ தந்த முத்தத்தில்
இறைவனின் வாசனை இருந்தது

இந்த உலகம் ஊமையாகிப் போனது
நீ கால் கொலுசைக் கழட்டியபோது

உன் கொலுசைக் கையிலேந்தி
மெருகேற்றிக் கொண்டிருந்தவனின்
கையை வெட்ட வேண்டும்போல்
இருந்தது எனக்கு

நிசப்த மரத்தின் கீழ் அமர்ந்து
மறுபடியும் ஏன் மௌனப்பால் குடிக்கிறாய்?

நீ பேசமாட்டாய்
நான் அழமாட்டேன்
இந்த போட்டி இன்னும் எத்தனை காலத்துக்கு?

வேண்டாம்
கண்ணீர்த்துளிகளால் உன் கன்னங்கள் காயமடைவதை
இனியும் அனுமதிக்க முடியாது என்னால்
நானே அழுதுவிடுகிறேன்

என் சாலையில் இப்போதெல்லாம்
கேட்டுக்கொண்டே இருக்கிறது
நீ பவனி வரும் உன்
மௌனக் குதிரையின் குளம்படிச் சத்தம்

அடிக்கடி கனைக்கிறது அது
என் வீட்டு வாசலில் நின்று

தடவித் தடவிக் கொடுக்கிறேன்
அதன் கழுத்தை நான்
மௌனமாகிப் போகாதா என்ற ஏக்கத்தில்

என் இடது காது வலிக்கவலிக்க
தொலைபேசியில் இன்பித்த உன்
குரலுக்கான நப்பாசையில்.

ruminagore@yahoo.com
பதிவுகள், ஜனவரி 2004 இதழ் 49

2. நிம்மதி - நாகூர் ரூமி

பஞ்சடைத்த விழிகளுடன்
பிச்சைக்கார தாடியுடன் இருந்த
ஈராக்கின் வாயைத் திறக்கச் சொல்லி
பேரழிவு ஆயுதங்கள் மறைந்துள்ளனவா என
ஈறுகளைப் பரிசோதிக்கிறது
க்ளோவ்ஸ் அணிந்த கைகளுடன்
டார்ச் அடிக்கும் அமெரிக்கா.

ruminagore@yahoo.com
பதிவுகள், ஜனவரி 2004 இதழ் 49

3. அந்தப் பேனா... - மஞ்சு ரெங்கனாதன்

கான்வெண்டில் பரிசாய் பெற்ற
சாக்லேட் , பென்சில் டப்பாவும்
ஒவ்வொரு வருடமும் பரிசாய்
ஆண்டுவிழாவில் பெற்ற
சாம்பியன்ஷிப் கோப்பையும்
கலந்து கொண்ட
அனைத்து போட்டிகளிலும்
பெற்ற முதல் பரிசும்
இருமனம் கலந்ததால் பெற்ற
திருமணப் பரிசும்
திருமணத்தின் பரிசான
குழந்தைச் செல்வமும்
அனைத்தையும் கடந்ததாய்
திருவள்ளுவர் உரையின்படி
தன் மகனைச் சான்றோன்
எனக் கேட்ட பின்னும்
இன்று உவந்தது உள்ளம்
மூத்த மகன்
முதல் மாதம்
பெற்ற பணத்தில்
வாங்கிவந்து
அன்புடன் அளித்த
அந்த பேனாவால்...

madhumitha_1964@yahoo.co.in
பதிவுகள், பெப்ருவரி 2004, இதழ் 50

4. அம்மா என் அருகில்! - திருமதி.ரஜினி பெத்துராஜா (ராஜபாளையம்.) -

பார்த்தே இராத
புதுமனிதனுக்கு
பரிதாபப்படத் தோன்றியபோது
பொறாமையற்று
பிற உள்ளத்திற்காக
பிரார்த்தித்தபோது

என் குற்றங்கள் அனைத்தும்
என் முன்னே
தெரியத்தொடங்கியபோது
அம்மா உன் அடிச்சுவட்டில்
என்னை அழைத்துச்செல்வது
புரிந்தது.

rajini_raja80@rediffmail.com
பதிவுகள், பெப்ருவரி 2004, இதழ் 50

5. புலத்தில் இருந்து ஒரு கடிதம்...! - கவிஞர் த.சரீஷ் (பாரீஸ்)

இப்போது எனக்கு..
நினைவில் இருப்பதெல்லாம்
அந்த இருண்ட நாட்களில்
உந்தன் துணையுடனே
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு
நடந்த நாட்கள்தான்..!

என் அன்பு நண்பா..!
நலம்தானா...?
எத்தனைநாட்கள் உன் முகம்பார்த்து..?
ஒட்டிப்பிறந்த இரட்டைக்குழந்தைகள்போல்
ஒன்றாய் வாழ்ந்தவர்கள் நாங்கள்
காலம் நம்மை கற்றோடு கடத்திச்சென்று
தூரத்தில் இருவரையும் இரண்டாக
பிரித்து எறிந்துவிட்டது..!

உன்னிடம் சொல்வதற்கு
என்னிடம் நிறையவே இருக்கிறது..!
ஆனால்...
இதயம் ஈரத்தில் கனமாகி
நெஞ்சுக்குள் நிரம்பி
வெந்தமனசின் வெப்பத்தில் வியாகி
கண்வழி மழையாய்ப் பெய்து-என்
கண்களை குறுடாக்கி
காதுகளை செவிடாக்கி
என்னையும் மௌனமாக்கிவிட்டது நண்பா...!

இப்போது எனக்கு..
நினைவில் இருப்பதெல்லாம்
அந்த இருண்ட நாட்களில்
உந்தன் துணையுடனே
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு
நடந்த நாட்கள்தான்..!

அந்தச் சின்னஞ்சிறிய ஊரில்

உயரமாய் ஒரு நட்புக்கொடி நாட்டினோம்
ஊர்க்கார உறவுகளின் உடைந்து சிதறிய
உடல்துண்டங்களுக்கு மத்தியில்
இரத்தம் தோய்ந்த கரங்களைக்கொண்டு
என் இதையத்தைத் தொட்டாய்..!
நீயும் நானும் உணர்ந்ததைப்போல
உயிர்குடிக்கும் அரக்கர்களுக்கு மத்தியில்..
அது மிகவும் கொடிய வாழ்க்கைதான்..!

இங்கு எனக்கே தெரியாமல்
இடைக்கிடையே எனக்குள்ளே ஊர்க்காற்று
வீசும்போதெல்லாம் உன் முகந்தான்
முதலில் முந்தியடித்து வந்துநிற்க்கும்

இப்போது...
இருண்டவானில் நிலவு ஒளிகொடுத்தபோதிலும்
மின்விளக்குகளின் ஒளியும் இருட்டை
இல்லாதுசெய்துவிடுகின்றது
அந்த இரவில் இருண்டவாழ்கையில்
ஒருபோதும் எமக்கு வெளிச்சமிருந்ததில்லை
நின்மதியும் இருந்ததில்லை..!

இப்போது எனக்கு..
நினைவில் இருப்பதெல்லாம்
அந்த இருண்ட நாட்களில்
உந்தன் துணையுடனே
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு
நடந்த நாட்கள்தான்..!

நீ நினைப்பதுபோல்
புலம் தாய்நிலம்போல் இல்லை நண்பா..!
சுற்றவர சுழன்று வீசிக்கொண்டிருக்கிறது
சூழ்சிக்காற்றும்
சுயநலக்காற்றும்
மூடநம்பிக்கைப்புயலும்...!

காதல் ”கார்” இருந்தால் கைகூடும்

பாசம் பணம் இருந்தால் கூடவரும்
நட்பு அதைப்பற்றி இன்னும்...
எனக்கு தெளிவாக விளங்கவே இல்லை

என் அன்பு நண்பா..
உன்னைப்போல உண்மையான மனிதனின்
முகம் பார்பது மிகவும்கடினம்...!
எல்லோரும் சுயனலமுகமூடி அணிந்திருப்பார்கள்
நடக்கும்கோதும் உண்ணும்போதும் உறங்கும்போதுகூட
முகமூடிகள் கழற்றவிரும்பாத மனிதர்கள்..!

உங்கெல்லாம் உண்ண உணவின்றி
உண்மையிலே பசியில் வாடுகிறார்கள்
ஆனால் இங்கு...
உண்ண உணவுநிறையவே இருந்தும்
உடம்பு மெலியவெண்ணி...
வீம்புக்கு வேண்டுமென்றே பட்டிணியிருக்கிறார்கள்
தாய்நிலத்தில் பாலுக்கு பாலகண் வேண்டி
பசியால் அழுது அழுது சாகின்றான்...!
புலம்பெயர் நிலத்தில்..
பகவான் குடம்குடமாய் பாலில்குழிக்கின்றார்...!

இப்படித்தான் இன்றைய வாழ்க்கை போகிறது...!
இதையெல்லாம் அறியாமை என்று விளக்கினால்..
நம்மவர் நம்பவா போகிறார்கள்
இல்லை...!!!
இவர்கள் நம்பவே மாட்டார்கள்...!
இருந்தும் சொல்ல முயற்சிசெய்தேன்..!
உண்மையை எடுத்துச்சொன்னேன்
எட்டி உதைத்தார்கள்...!
கவிதையாக எழுதிக்கொடுத்தேன்
கன்னத்தில் அறைந்தார்கள்...!
கருத்தரங்குபோல் மேடையில் விளக்கினேன்
கல்லெடுத்தெறிந்தார்கள்..!
கதை கதையாய்ச் சொன்னேன்
காறி உமிழ்ந்தார்கள்..!

இவர்கள் இப்படித்தான் நண்பா...!
நானுனக்கு ஏற்கனவே எழுதியதைப்போல
அறியாமைப்பேய் இவர்களை ட்டிப்படைக்கிறது..!
இந்த அறியாமைக்கும் சுயனலத்திற்கும் மத்தியில்
நானும் என் வாழ்கைப்படகை...
கடினப்பட்டு செலுத்திக்கொண்டதான் இருக்கிறேன்..!

இப்போது எனக்கு..
நினைவில் இருப்பதெல்லாம்
அந்த இருண்ட நாட்களில்
உந்தன் துணையுடனே
கண்ணீரைத் துடைத்துக்கொண்டு
நடந்த நாட்கள்தான்..!

நான் இப்போது எண்ணிக்கொண்டிருக்கிறேன்
இத்தனை இடைஞ்சல்களுக்கு மத்தியிலும்...
உந்தன் முகம்பார்பது சாத்தியமாகுமா..?
என் உள்மனது சொல்கிறது சாத்தியமாகும்..!!!

ஆழ்கடலில் அவித்தமீன் பிடிப்பதும்
புல்வெளியில் படகோட்டுவதும்
நிலவை மலர்போல் பறிப்பதும்
விண்மீனைப்பிடித்து கறிசமைப்பதும்
மேகத்தைஅள்ளி மெத்தைகள் செய்வதும்
சாத்தியம் காதென்றால்...
நான் நாடு திரும்புவதும்
நண்பா உன்னையும் என் மண்ணையும்
கட்டித்தழுவுவது நிச்சயம் சாத்தியமாகும்..!
என்றாவது ஒருநாள்.....
நான் உங்கு வருவேன்...!
நான்வரும்போது...
சாமக்குருவிள் சத்தம்போட்டுக்கொண்டும்
நட்சத்திரங்கள் மின்னிக்கொண்டும் இருக்காது
ஏனெனில்..
கட்டாயம் அது பகலாய்தான் இருக்கும்...!
கதிரவனின் ஒளி நிறைந்த...
விடிந்த காலைப்பொழுதாய்தான் இருக்கும்...!!!

6. கடைசியாக ஒரு கடிதம்...! - கவிஞர் த.சரீஷ் (பாரீஸ்

அன்புள்ள காதலிக்கு...
உனை அணைத்துக் கனவிலே
கரம்பிடித்து...
காதல் எனும் தேர் இழுத்து
கடைசியிலே..
கால்களுக்கு விலங்குகள்கொண்ட
காதலன் எழுதுவது...

விண்மீனைப்பிடித்து..
வீணைமீட்டுமுந்தன் கையினிலே
கொடுத்து...
மணம்வீசும் மலர்போன்ற
மங்கையுந்தன் கூந்தலிலே
சூட்டிவைப்பேன்...!
என.. காதல் மழையில்
நனைந்து நனைந்து
மழைத்துளிகள்..
சொட்டச் சொட்ட..
மார்கழிக் குளிரினிலே
மழலைத் தமிழில்...
சொன்னவன்தான்
இதையும் எழுதுகிறேன்...!

விலங்குகள் மாட்டப்பட்ட
கால்களுடன்..
தோளிலே பெரும் சுமைகளைச்
சுமந்துகொண்டு..
உன் இதையத்தையும்
சுமப்பதற்கு...
என்னால் முடியவில்லை
தோழி...!!!

என்னை மறந்துவிடு
மலரே...!
மன்னிக்கும் மனதிருந்தால்

என்னை மன்னித்துவிடு
மங்கையே...!!!

என் மகன் வெளிநாட்டில்
நான் மகான் உள்நாட்டில் என
நாட்டையே ஏ்பவன்போல்
உள் ஊரிலே நாடகம் நடாத்தும்
என் தந்தை...!

பாரீசில் என் பிள்ளை என
வன்னிக்கும் கொழும்புக்கும்
மாறி மாறிப் பறக்கின்ற
என் அன்னை...!

பருத்தித்துறையில் இருந்துகொண்டே
பாரீசுக்கு எப்போ போவேன் என
வெளிநாட்டு மோகமெனும் மெத்தையிலே
கண்களைத் திறந்தபடி
கனவுகாணும் என் தம்பி...!

எப்போதோ..
மணம்முடித்து வாழ்பவள்
இப்போது வந்து...
தொலைபேசியில் சீதனம்கேட்டு
தொல்லைகொடுக்கும்..
என் அக்கா...!

வயசுக்கு வந்தபின்பு
மனசுக்குள்ளே...
மாங்கல்யம் எப்போது..??
மன்மதன் வருவானா..?
மலர்மாலை இடுவானா...?
அண்ணன் இருக்கின்றான்
அச்சமில்லை..!
அன்பாக வழவைப்பான் என
அஞ்சாமல் இருக்கும்
என் தங்கை...!

அத்தனைபேரின்...
ஆசைகளையும் நிறைவுசெய்ய
ஒரே ஒரு நான்...!!!

கால்கடுக்க... கால்கடுக்க...
கைதேய.. கைதேய...
கோப்பை கழுவி...
"கலோ" என்றதும்
காசனுப்புபவன்...
நான் மட்டும்தான்..!

என்னால் முடியவில்லை
சினேகிதி...!!!
இத்தனை சிக்கல்களுக்கு
மத்தியிலும்...
உன்னோடு தொடர்ந்துவர
என்னால் முடியவில்லை...!

இனியவளே...
இன்றிலிருந்து நீ இல்லாத
என் மீதிப்பயணத்தை
தொடருகிறேன்...!

செல்கின்றேன்
உயிரே...
உன்னை என் உள்ளத்தில்
உடுத்திக்கொண்டவன் இப்போது
உதறிவிட்டுச் செல்கின்றேன்...!!!

கைகளைப் பற்றியவன்
கன்னத்தைக் கிள்ளியவன்
கட்டி முத்தம்கொடுத்தவன்
கார்கூந்தல் கோதியவன்
கண்மை தொட்டு..
கவிதை எழுதியவன்
கண்ணீருடன் கடிதத்தையும்
காதலையும் முடித்துக்கொண்டு

மீதிப் பயணத்தைத்
தொடருகின்றேன்...!!!

இப்படிக்கு...
புலம்பெயர்ந்த காதலன்...!

7. வசந்தமே வா... - கவிஞர் த.சரீஷ் (பாரீஸ்

கொடிய இருள் எங்கும்
பரவியிருக்க விண்மீன்களின்
பொன்னொழி யொலிக்க
தென்றல் தவளும் அன்றைய இரவில்
நான்....
தவிக்கின்றேன் அன்பே...!

சற்று முன்புதான்
நீ சென்ற
செய்தி அறிந்தேன்...!

திடீர் என்று அதிர்ந்தேன்
கொஞ்சம் கொஞ்சமாய்
துயரில் மிதந்தேன்

சிதறிய நெஞ்சினுள்
மெலிஞ்சி முள்ளாய் சோகம்
இடைக்கிடையே இதயம் வலிக்கும்

எந்தத்தொடர்பும் இல்லாது
எந்தச்சொல்லும் சொல்லாது
போய்வருகிறேன் என
எதுவும் கூறாது
போகிறாயே ஏன்...?

உன்னை
வழியனுப்பி வைத்துவிட்டு...
காலை விடிந்து விட்டது என
கதிரவன் சொல்கின்றான்...!
ஆனால்
எனக்குமட்டும்
விடிகாலை இன்னமும்
கவில்லை
தொலைவினிலே நீ...!
தொலைத்தவன் போல் நான்...!

இதயத்தில் இடைவிடாமல்
இடிமின்னல் வெடிக்கும்...!
இடைக்கிடையே
எரிமலைபோல் எரியும்...!

உலக வரைபடத்தில்
நீ எந்த தேசத்தில் இருந்தாலும்
நீ இருக்கும் இடத்தில்தான்-என்
உணர்வுகள் உலாவருகின்றன...!

நிலத்தில் எறிந்த விதை
வேர்விட்டு வளர்வதைப்போல-உன்
நினைவுகள் விருட்சமாய்
விழுதெறிவது ஏன்...?

எதற்காக காதலித்தாய்...?
ஏன் பிரிந்தாய்...?
எதுவுமே புரியவில்லை

இந்த பிரிவும்
ஒரு வகையில் விரும்புதலுக்கு
உரியதுதான்
அதுதான்...
நினைக்கும் போதெல்லாம்
காதலெனும் பாடலுக்கு
அர்த்தம் சொல்கிறது...!

இந்த பிரிவும்
ஒரு வகையில் விரும்புதலுக்கு
உரியதுதான்
கூடியபின் பிரிந்தும்
பிரிந்தபின் கூடுவதும்
காதலில் சுகமல்லவா...!

எனக்கு நம்பிக்கை
வளர்கிறது-என்
காதலைப்போல...

இலைகளின் உதிர்வு
மரங்களின் மரணமல்ல...!
இப்போது இலைகளின்
இடைவேளை...!
விரைவினில் வசந்தகாலம்
வந்துவிடும்...!

இப்போது நீ
எந்தக்காலத்தில் இருக்கிறாய்-என்
வசந்தமே...???

sharish_fr@hotmail.com
பதிவுகள், பெப்ருவரி 2004 இதழ் 50 -

8. நிலவே என்னிடம் - சத்தி சக்திதாசன் -

நிலவில் களங்கமாமே
நேற்றொருவன்
நிச்சயமாய்ச் சொன்னான்.

நான் பார்க்கும்
நிலவு
என்றுமே வட்டமாய்
எப்படி ?
அமாவாசை
ஒரு நாள் மட்டும்
ஓய்வெடுத்துக்கொண்டு
வளர்வதும் பின்
தேய்வதும் !

இரவுக்கு
விளக்கேற்ற
விடாமுயற்சியுடன்
விளையும் அந்த
வான்மதியில்
களங்கமா ?

எரியும் அந்தச் சூரியனின்
வெப்ப ஒளியை
நீ
கொஞ்சம் கொஞ்சமாய்
ஏந்தி
இருண்ட இந்த
உலகை
வெளிக்கப்பண்ணுவதை
உணராத
ஊர்க்குருவிகளின்
அபாண்டப்பழியம்மா இது.

பௌர்ணமியிலிருந்து
அமாவசைவரை

தேய்ந்து ஒளியிழந்து
பின்
மறுபடியும் ஒளிபெற்று
பூரணத்துவத்தை அடையும்
நிலவே !

மற்றவர்க்காய்
கொடுத்துத் தேய்ந்தவர்
மறுபடியும் பெறுவர் வாழ்வு
எனும்
வாழ்க்கை வட்டத்தை
விளக்கும் செய்கையன்றோ !

விளக்கமற்ற
விடியலிழந்தவர்
விளிக்கும்
வீனான கூற்றன்றோ
உன்மீது
சுமத்தப்படும் களங்கம்.

கலங்காதே
நன்மைகள் கண்ணுக்குப்
புலப்படாத உலகமம்மா
உண்மைகள்
உணரப்படாத
பூலோகமம்மா

வேதனகளை
ஓரத்தில் மூட்டை கட்டிவிட்டு
மறுபடியும் இந்த
இருட்டு உலகிற்காக
மீண்டுமொருமுறை தேய்ந்துவிடு
ஏனென்றால் அடுத்து
வளர்வதுதானே உன்வேலை,
மீண்டுமொருமுறை
இந்தக் குருடர்களுக்காக
தேய்வதற்காக !

9. காதலுக்குச் சவால் - சத்தி சக்திதாசன் -

காதலே உனக்கொரு சவால் !
உன் பெயராலே இணைந்த
உள்ளங்கள்
ஜாதி மதம் அந்தஸ்து
வேற்றுமைகளால்
பிரிக்கப்படும் துயரத்திற்கு
ஒரு விடிவு சொல்.

உன் பெயரைச் சொல்லி
தம் காமப்பசியைப்
போக்கும்
சிலகயவர் கன்னியரை
ஏமாற்றும் நிலைக்கு
ஓர் விடிவைச் சொல்.

உன் பெயராலெ
மங்கையின் மனத்தை
களவாடிப் பின்
பெற்றோரின் பெயராலே
அதே மங்கைக்கு
விலை கூறும்
வீணர்களை
விழுத்திட வழியொன்று சொல்.

இளைஞ்சரின்
இதயங்களை இலகுவாய்
கவர்ச்சி எனும்
மாயையினால்
மயக்கிப் பின்
சிதைக்கும்
சில சூர்ப்பனகைகளை
இனங்கண்டு ஒதுக்கவொரு
புதுப்பாதை காட்டு

உண்மை அன்பைப்

போலிவேஷத்தினின்றும் பிரித்தறிய
வகையொன்று சொல்.

தினமொன்று உனக்கென்று
ஒதுக்கியிங்கு
இளம் உள்ளங்கள் மகிழ்ந்திடும்
இனிய வேளையிலே
உனக்கிந்த சாவாலை
உண்மையாய் விடுக்கின்றேன்
உலகில் காதலின்
மகத்துவத்தை
கடைசி மனிதனுக்கும்
கற்றுத்தர மொழியொன்று சொல்.

sathnel.sakthithasan@bt.com
பதிவுகள், பெப்ருவரி2004, இதழ் 50

10. தும்பி விட்டுச் சென்ற எச்சத்தைப் பற்றியும் - தாஜ்

முகம் ஜில்லிட
காற்று எழுதிச் சென்ற
செய்தியை வாசிக்கும் முன்
முத்து முத்தாய் தொடர்ந்தது
மழையின் விளக்கம்.
காலடியில் மேவும் ஈரம்
நடையை மாற்றி விட்டது.
தெளிந்த வானம்
உறுத்தா வெளி
வேர்வையின் நாற்றமுமில்லை.

செடி கொடிகளோடு
மரங்களும்
பூரணத்தை நோக்க
செழிப்பின் முனைப்பாய்
படரும் வண்ணமயம்.
என் வீட்டுத் தோட்டத்திலும்
குதூகலத்தின் கூறுகள்.

பார் என்றன
உயரக் கிளைத்த மரங்கள்.
பூத்துக் குலுங்கிய மலர்களும்
புது வண்ணத் துளிர்களும்
கவனத்தை ஈர்க்க
தவழ்ந்து வந்த சுகந்தத்தில்
மொட்டு அவிழ நின்றேன்.

மின்னிய மகரந்தத்தின்
எச்சத்தை வட்டமிட்டத்
தும்பி ஒன்று இதழோரம்
விட்டுச் சென்றது.

11. அன்புடன் - தாஜ் -

உயிர்த்தவனுக்கு
சுவாசம் மட்டுமல்ல
தேவைகளின் தொடர்நீளம்
இன்றைய கணக்கில்
உன் கடிதமுமில்லை

கூறுகள் வழியே
நம்மைப் பொசுக்கும்
உஷ்ணம்
இருத்தலுக்கோர் சோதனை
காலமும்
கால்பட்ட நிலமும் அப்படி

கொண்ட சூட்டிற்கு
களிம்பிட்டுக் கொள்ளும்
விசனத்தில்
தவறவிட்ட
நட்சத்திரச் சங்கதிகள்
என்னில் ஏராளம்
உன்னிலும் நிகழ்ந்திருக்கும்
எனக்கான ஒரு
கடிதத்தையும் சேர்த்து

என் யூகங்கள்
பொய்க்குமெனில் உன்
பொதுப்பார்வைக்கு நான்
நகர்த்தப் பட்டிருக்கக்கூடும்
அந்த உடைந்த சிற்பமாய்
வற்றிய நதியாய்
அல்லது
இன்னொருவன் என்ற ஸ்தானம்

நம் சீதோஷ்ண நிலை
திடுமென எல்லை மீறுகிறது
அதீதமாய்

இன்றைய தினங்களைப்போல்
தவிர
கடிதமெழுதும் மொழி
உனக்கு மறந்துவிட்டதென
நினைக்கவும் சாத்தியமேது

12. விழிப்புணர்வு - தாஜ் -

நேரம் கெட்ட நேரம் என்றாலும்
என் பயணங்களை
இரவில்தான்
தேர்வு செய்கிறேன்.
நீண்ட தூரம்
இருளில் பயணிப்பதும்
தவிர்க்க முடியாத அனுபவம்.

சின்னச் சின்ன
நட்சத்திரங்களே
வெள்ளையாய்
கண்கள் சிமிட்டுகின்றன.
முன்தினம் பார்த்த
முழுநிலவு
இன்றைக்கு
தேய்ந்து கொண்டிருக்கிறது.
கண்களுக்கெட்டிய
தூரமெல்லாம்
கவிழ்ந்து கிடக்கிறது
மையிருட்டு.

இரவுகள் சுகமானதுதான்
யாரும் யார் முகத்தையும் காணக்
கூச வேண்டியதில்லை.
இருட்டில் எல்லோருக்கும் உண்டு
இன்னொரு முகம்
தடங்கல்களுக்கும்
பதற வேண்டியிராது
நித்திரை மனிதர்கள்
எதையும் அறிய மாட்டார்கள்.

வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி
என் வாகனம் விரைகிறது
எல்லோரும் தூங்கி
கனவுகளில் சஞ்சரிக்கும் நேரம்

மறுபடியும் பிறக்கலாம்.
திரும்பத் திரும்ப
இறக்கலாம்
வானுக்கும் பூமிக்குமான
வெளியில் நீண்டு
நிம்மதியாய் போகம் செய்யலாம்.
கலவியில் கசியும்
பூரணம் உணர்ந்து
பூரித்தும் போகலாம்.

புதிய விடியலில்
தூங்கியவர்களும்
கனவுகளின் பக்கம்
திரிந்தவர்களும்
அவரவர் திக்கில்
முந்தி விரைய
உறங்க நான்
அமைதியானதோர்
இடம் தேடி
அலையக் கூடும்.

tajwhite@rediffmail.com
பதிவுகள், பெப்ருவரி 2004, இதழ் 50

13. வேர்த்தாலி தொலைத்த கள்ளிப் பூ! - திலகபாமா (சிவகாசி)

உனக்கே உனக்கு மட்டுமான
முல்லையாகத்தான் நான்
வேண்டுமென்றிருந்தாய்
காதல் வறட்சியால் நான்
கள்ளியாகிப் போனேன்
காற்றின் ஈரத்தை உண்டு
காத்திருப்பை முட்களாக சூடி
சூடிய முட்களுக்குள்ளும் ஈரம் மூடி
வானத்து முதல் துளி வீழ்ந்த போதும்
முட் கிரீடம்
எந்த ஆடும் மேய்ந்து விடாதிருக்க
குடும்ப கௌரவமாய் சுமத்தப் பட்டிருந்தேன்

சிறையிருப்புக்காய் குறைபட்ட போது
உனக்கென்ன
பட்டாம்பூச்சி கணக்காய்
சிறகுகளாய் இதழ்கள் இருக்கே
மண்ணோடு என் பூவையும்
கட்டி வைத்த வேர்கள் சொல்ல

முதல் முதலாய் இதழ்களை
அசைத்துப் பார்க்கிறது இந்த கள்ளிப் பூ
மேகமெங்கும் கள்ளிப் பூக்களும்
துளசிப் பூக்களும்
வானிலிருந்து தேன் மழை சிந்த
சிறகை விரித்து
வாழத் துவங்கியிருக்க

புலம்பும் வேர்கள்
இதழ்களை சிறகுகளாய்
அடையாளம் காட்டியதற்காய்
இழந்து விட்ட தேன் களுக்காய்

வேர்த்தாலிகளைத் தொலைத்து
இடம் பெயருகின்றன பூக்கள்

விதைகளாய் உருமாறி

mathibama@yahoo.com

பதிவுகள் 2004, இதழ் 50

14. கல்லறை வாழ்க்கை... - அ.ரமேஷ் அரவிந்தன் -

கல்லறைக்குத் தெரியுமா?
அதன் பிறந்த நாள்
ஒரு இறந்த நாளென..

ramash5@hotmail.com
பதிவுகள், மார்ச் 2004, இதழ் 51

15. கிணற்றுத் தவளைகள் - வ.ந.கிரிதரன் -

தவளைகளின் கொட்டம் தாங்க முடியவில்லை.
கிணற்றை விட்டு வெளிவர
மாட்டோமென்று அடம் பிடிக்கின்றன.
சில தவளைகளுக்கோ வார்த்தைகளென்றால்
அவ்வளவு உயிர். மழைக்காலங்களில் அவை இழுக்கும்
ஆலாபனையிருக்கிறதே! வார்த்தைகளை வைத்து
மாயாஜாலம் காட்டுவதில் வல்லவை அவை. மேற்படி
தவளைகள் சில வேளைகளில் அறிதலுக்காக
மிகவும் பிரயத்தனம் செய்கின்றன.
ஆயினும் 'வெளிவருத'லென்பது அவற்றுக்கு
வேப்பங்காய் தான்.
புறம் விரிக்குமென்பதறியாத அவை
அறிதலின் உச்சியில் நின்று
ஆனந்தக் கூத்தாடுவதாகக் கனவுகள்
காணுகின்றன. தமக்குள் அடிக்கடி மோதிக் கொண்டபோதும்
ஒரு விடயத்தில் மட்டும் அவை பெரிதும் ஒற்றுமையாக
இருக்கின்றன. அது....
இருப்பை நிலை நாட்டுவதிலுள்ள ஆர்வம்.
தம்மிருப்பை உறுதி செய்வதில் அவை
பெரிதும் ஒற்றுமையாகவிருக்கின்றன.
ஆயினும் ஒற்றுமையின் பலம் கொண்டு
வெளிவர மட்டும் அவை சிறிதும்
முயல்வதில்லை.
கிணற்றுத் தவளைகளின் இருப்பு
அவற்றின் பரிதாப நிலையினைப்
புலப்படுத்தும். வெளி விரிந்து கிடப்பதை
அவை அறியவில்லை. இருந்தும் அவை
மிகவும் சந்தோஷமாகத்
தானிருப்பதாகத் தெரிகின்றது.
போதுமென்ற மனதில் பொன் செய்து
வாழும் தவளைகள்!

16. தேடல்கள்! -- வ.ந.கிரிதரன் -

எப்பொழுதுமென் நெஞ்சில் களியை
ஊட்டுவனவாகக் கீழுள்ளவற்றினைக்
கூறிடலாம்.
நல்ல நூல்கள்; நதி;கடல்;
மலை;சுடர்;புள்;மரம்;காற்று...
இது போல் பலப் பல. இவை
எனக்குப் படைப்பின் அதிசயத்தை,
அற்புதத்தினைப் போதிக்கின்றன.
அகக் கண்களை எல்லைகள் கடந்து
நோக்கத் தயார் செய்து விடுகின்றன.
எப்பொழுதுமே
அறிதலுக்கும், புரிதலுக்குமாக
தேடுமென் நெஞ்சத்தின்
தாகம் இச்சிறுகணவிருப்பில்
அடங்கிப் போகப் போவதில்லை
என்பதும் புரிந்துதானிருக்கிறது.
இருந்தும் இயன்றவரை
வினாக்களுக்குரிய விடைகளை
நாடித் தொடருமென் தேடல்
தொடரத் தான் போகின்றது.

பதிவுகள் 2004, இதழ் 51

17. எங்கள் கிராமத்து ஞானபீடம்! - -- நா.முத்து நிலவன் --

காலை வணக்கத்தில்
'நேர் நில்' சொல்லியும்
நிமிர்ந்து பறக்கச் சக்தியற்று
தர்மசக்கரத்தை மறைத்து
தேசியக்கொடி தரை பார்க்க,
மாணவர் ஊர்வலம்
மரத்தடி வகுப்புக்கு
மவுனமாய்ச் செல்லும்.

ஐந்து வகுப்பிலும்
அறுபத்தேழு பேர்சொல்லி
வருகை பதிவதற்குள்
மணியடித்துவிடும்,
அடுத்த வகுப்பு துவங்கும்.

பெரியாரைப் பற்றிய
உரை நடைக்குமுன்
கடவுள் வாழ்த்தோடு
செய்யுள் தொடங்கும்

உலகப் படத்தில்-
பாற்கடலைத் தேடும்
இலக்கியம்.

ஆண்டவனைக் காப்பாற்றும்
அறிவியல்.

ஆள்பவரைக் காப்பாற்றும்
வரலாறு.

வறுமைக் கோடுகளை மறைத்து
வடஅட்சக் கோடுகளைக் காட்டும்
புவியியல்.

கடன்வாங்கச் சொல்லித்தரும்

கணக்கு.

கிழிந்த சட்டை,
நெளிந்த தட்டோடு
அச்செழுத்துக்களை மேய்ந்த
அஃரணத்தில் மாணவர்.

'எலேய்! எந்திரிச்சு வாடா'
அவ்வப்போது வந்து
அழைக்கும் பெற்றோர்.

உபகரணங்கள் இல்லாமல்
பாவனையில் நடக்கும்
செய்ம்முறைப் பயிற்சி.

அவசரத்தில்
தின்றதை வாந்தியெடுக்கும்
தேர்வுகள்.

பழைய மாணவர் எம்.எல்.ஏ ஆகி
பள்ளிக்கு வந்தார்.

ஆசிரியர் கையை
ஆதரவாய்ப் பற்றி,
'கோரிக்கை ஏதுமுண்டா
கூறுங்கள்' என்றார்-
'நிரந்தரப் படுத்தணும்
நீயும் சொல்லணும்'

திறந்த உலகம்தான்
சிறந்த படிப்பாம்,
எங்கள் பள்ளிக்குக்
கதவே கிடையாது-
கட்டடம் இருந்தால்தானே?

'எங்கள் பள்ளி நல்ல பள்ளி
கட்டடம் இரண்டு பூங்கா ஒன்று'

-நடத்துவார் ஆசிரியர்.
'எங்கேசார் இருக்குது?'
மரத்தடி மாணவன்
எழுந்து கேட்பான்.
'புத்தகத்தைப் பார்ரா'
போடுவார் ஆசிரியர்.

போதிமரத்தடியில்
புத்தருக்கு ஞானம்,
புளியமரத்தடியில்
மாணவர்க்குப் பாடம்.

இதுவே-
எங்கள் கிராமத்து
ஞானபீடம்!

18. எங்கள் கிராமத்து ஞானபீடம் -- நா.முத்து நிலவன் --

'நேர் நில்' சொல்லியும்
நிமிர்ந்து பறக்கச் சக்தியற்று
தேசியக்கொடி தரை பார்க்க,
மாணவர் ஊர்வலம்
மரத்தடி வகுப்புக்கு
மவுனமாய்ச் செல்லும்.

ஐந்து வகுப்பிலும்
அறுபத்தேழு பேர்சொல்லி
வருகை பதிவதற்குள்
அவசரப்பட்டு
மணியடித்துவிடும்,
அடுத்த வகுப்பு துவங்கும்.

பெரியாரைப் பற்றிய
உரை நடைக்குமுன்
கடவுள் வாழ்த்தோடு
செய்யுள் தொடங்கும்

உலகப் படத்தில்-
பாற்கடலைத் தேடும்
இலக்கியம்.

ஆண்டவனைக் காப்பாற்றும்
அறிவியல்.

ஆள்பவரைக் காப்பாற்றும்
வரலாறு.

வறுமைக் கோடுகளை மறைத்து
வடஅட்சக் கோடுகளைக் காட்டும்
புவியியல்.

கடன்வாங்கச் சொல்லித்தரும்
கணக்கு.

கிழிந்த சட்டை,
நெளிந்த தட்டோடு
அச்செழுத்துக்களை மேய்ந்த
அஜீரணத்தில் மாணவர்.

அவசரத்தில்
தின்றதை வாந்தியெடுக்கும்
தேர்வுகள்.

'எலேய்! எந்திரிச்சு வாடா'
அவ்வப்போது வந்து
அழைக்கும் பெற்றோர்.

உபகரணங்கள் இல்லாமல்
பாவனையில் நடக்கும்
செய்ம்முறைப் பயிற்சி.

பழைய மாணவர் எம்.எல்.ஏ ஆகி
பள்ளிக்கு வந்தார்,
ஆசிரியர் கையை
ஆதரவாய்ப் பற்றி,
'கோரிக்கை ஏதுமுண்டா
கூறுங்கள்' என்றார்-
'நிரந்தரப் படுத்தணும்
நீயும் சொல்லணும்'

திறந்த உலகம்தான்
சிறந்த படிப்பாம்,
எங்கள் பள்ளிக்குக்
கதவே கிடையாது-
கட்டடம் இருந்தால்தானே?

'எங்கள் பள்ளி நல்ல பள்ளி
கட்டடம் இரண்டு பூங்கா ஒன்று'
-நடத்துவார் ஆசிரியர்.
'எங்கேசார் இருக்குது?'
மரத்தடி மாணவன்

எழுந்து கேட்பான்.
'புத்தகத்தைப் பார்ரா'
போடுவார் ஆசிரியர்.

போதிமரத்தடியில்
புத்தருக்கு ஞானம்,
புளியமரத்தடியில்
மாணவர்க்குப் பாடம்.

இதுவே-
எங்கள் கிராமத்து
ஞானபீடம்!

muthunilavan@yahoo.com
பதிவுகள், நவம்பர் 2004 இதழ் 59

19. நீ என் வண்ணத்துப்பூச்சி! - இளங்கோ -

நமக்கு
ஒருபோதும் தெரிவதில்லை;
நம்மைச்
சாதாரணமாய்க் கடந்துசெல்பவர்கள்
வாழ்வின்
மிகப்பெரும் தருணங்களை
கொண்டுவந்து சேர்க்க
மீள வருவார்களென்பது

நதியின் கரையில்
விரித்து வைத்திருந்த
புத்தகத்தின்
பக்கமொன்றில்
வந்தமர்ந்துபோன
வண்ணத்துப்பூச்சியின் நினைவுடன்
உன்னையும் முன்பு
பத்திரப்படுத்தியிருக்கக்கூடும்

ஆகவேதான்
இன்றைய உரையாடல்களிலும்
அவ்வவ்போதைய இடைவெளிகளிலும்
வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பையும்
வர்ணங்களையும்
நீயெனக்குள்
உதிர்த்தபடியிருக்கிறாய்

சாம்பர் பூசிய
மழைக்கால வானத்தில்
நமக்கான பொழுதின்
அகாலம்
பூத்துக்கிடப்பதாய்
மழைவருவதற்கு முன்பான
ஒவ்வொருபொழுதுகளிலும்
எச்சரிக்கிறாய்

அழகின்மையில் அழகையும்
அபத்தத்தில்
வாழ்வதற்கான நம்பிக்கையையும்
பிரித்துணரும் தன்மை
எல்லோருக்கும் வாய்ப்பதில்லை
உன்னைப்போல

நேசிப்பின்
முதல் இழையைப் பிரிக்கமுன்னரே
பிரிவு
தன்கொடூரநிழலுடன்
எங்கோர் மூலையில்
காத்திருக்கலாமென்று
வாழ்வின் கசப்பையும்
இயல்பென
நினைக்குமுன்னை
யாருக்குத்தான் பிடிக்காமற்போகும்?

elango07@yahoo.ca
2004.06.03
பதிவுகள் , நவம்பர் 2004, இதழ் 59

20. விளம்பரம்(அல்ல) - கரவைதாசன் -

அன்பின் அப்துல்லா,

உசிரை மசிராய்
உழுத மண்ணிலே - நான்
உன்னை எங்கு தேட...

நீங்கள் இருந்த வளவும்
எங்களது வீடும்
உனது நிக்காவில் நின்ற
எனது தலையைப் போலத்தான்...

குற்றமற்றவர்களை அறியாமலே
கற்கள் வீசப்பட்டதால்
நானும் சிலுவையை
சுமந்து கொண்டுதான் நிற்கிறேன்.
மன்னித்துக்கொள்!

சேதி! அறிந்திருப்பாய்,

ஒரு மத்தியானம்
நடுமுற்றத்தில் விழுந்து நொருங்கிய
அதே! சூ¡¢யன்தான்
எங்களது இரவுகளிலெல்லாம் - இப்போ
வரத்தொடங்கிவிட்டான்.

இது, விளம்பரமல்ல
விபரம் அறிந்தால்
உடனே பதில் போடு.

பதிவுகள், பெப்ருவரி 2005 இதழ் 62

21. இணக்கு! - கரவைதாசன் -

புதியதோர் உலகினுள்
வடு ஒன்று உருவாகப் போகின்றது.
மறைவது அது எப்போது?

தலைமுறைகள் ஏழேழு தாண்டியும்
விழும் இவ்விதைகளை
முளைக்க விடுங்கள் - விழுந்த
இடத்திலேயே.

கிளைகளை வேண்டுமானால்
அவை
எங்கேனும் பரப்பட்டுமே.
ஆனாலும்,
அந்த விழுதுகள்
வேர் இறக்க முன்பாக
ஓட்டி வையுங்கள் - நல்ல
கிளைகளை.

புதியதோர் உலகுள்
ஊடுருவப்போகும் - வடு
மறையட்டுமே இப்போதாவது.

தாவரங்கள் இரண்டை
ஒட்டு வைப்பதில்
நற்பயன் பெறலாம் - எப்போதும்
இது
மனிதனுக்கும் பொருந்தும்.

பதிவுகள், பெப்ருவரி 2005 இதழ் 62
thasan@vejen-net.dk

22. கடற்கோள்! - வ.ஐ.ச.ஜெயபாலன்-

எவரிடம் சொல்லி அழ தெய்வமே
ஏதிலி உறவுகள் ஈழக் கரையிலே
வேருடன் சாய்ந்தனரே

போருக்குத் தப்பியவர் - அங்கு
பொல்லாத வெள்ளப் பெருக்கில் பிழைத்தவர்
ஊருடன் போயினரே
உன்மத்தம் கொண்ட பேய் அலை வாயினில்

மீனவத் தோழர்களே - கிழக்கின்
மீன்பாடும் தேனக சகோதரரே
ஊனை உருக்குதையா நீங்கள்
உதவிக்கு எம்மை அழைத்த பெருங்குரல்
காற்றில் அலைகிறதோ - எங்கள்
கரங்களைத் தேடித் தேடித் தவித்தீரோ.

துன்பங்கள் யாதினிலும் - எங்கள்
துணையென வந்த தமிழகமே
என்ன கொடுமையடி - தாயே
இனிய குழந்தைகள் நீண்ட கரைதொறும்
சிந்திக் கிடந்தனரே
ப:றுளி ஆற்றுடனே எங்கள்
பண்டைக் குமரியும் தின்ற கொடுங்கடலே
இன்னும் பிரளயமோ - விதியே
எங்களை என் செய்ய நினைத்தாயோ

visjayapalan@yahoo.com
பதிவுகள், ஜனவரி 2005, இதழ் 61

23. அலைப் போர்! - ரவி (சுவிஸ்)

இன்னுமென்னால் கற்பனை பண்ண முடியவில்லை
நாளுக்கு நாள் பெருகும் செய்திகளினூடு
நான்
பயணித்துக் கொண்டுதானிருக்கிறேன்.
முடியவில்லை, இந்தக் காட்சியை
கற்பனையுள் வார்த்துக் கொள்ள.
அலைகள் இராட்சதித்து
மண்ணில் புகுந்து
நிகழ்த்தியாயிற்று ஒரு அலைப் போர்.
பூமியின் மீதான ஒரு பிரளயத்தின் முன்மாதிரியாய்
எல்லாம் நடந்து முடிந்தது.

இந்தத் துயர்த் திரட்சியைத் தாங்கிக் கொள்ள
மனிதர்களால் முடியுமெனின்,
இவையெல்லாம்
அசாதாரணமாகவே தோன்றுகிறது எனக்கு.

ஒவ்வொரு சோகத்தின்போதும்
கடற்கரை மணலில் கால்பதித்து ஆறுமென் மனம்
இப்போ
இந்தக் கடற்துயரை ஆற்ற எங்கு செல்வது.

நடமாடித்திரிந்த உடல்களை உயிர்நீக்கி
உடலங்களாக பரத்திச் சென்றது
நீர்வெறிப் பிரளயம்.
தனித்து விடப்பட்ட ஒற்றைத் தென்னைகளில் அதன்
கீற்றுகளின் ஒலி துயா¢சை எழுப்ப,
மீளமுடியாமல்
சரிந்துபோனது கடற்கரையின் வாழ்வு.
எதுவும் நடவாததுபோல் அலைகளெல்லாம்
இயங்கத் தொடங்கியுமாயிற்று.

மரணத்தின் அச்சம் கலந்த தொனி
இதயத்தின் ஒவ்வொரு மூலையையும்
நிரப்பி நிரப்பித் தழும்புகிறது.

மீளமுடியாமல் அவதியுறும் மக்களைப் பார்த்து
எதிர்காலம் கையசைத்து,
விலகிச் செல்கிறது.
இந்த சுனாமிக் கொடுமையை அலைகள் இசைத்து
வாழ்வுக்கு சவால்விட்டுச்
சென்றிருக்கிறது.
இதயத்துள் இறக்கப்பட்டிருக்கும் இந்த
அதிர்ச்சியை நாம்
பிடுங்கி எறியவும்
காயமாற்றவும்
இயங்கவும் பற்றிக்கொள்ள எதுவுமின்றி
அசைகிறது வாழ்வின் நுனி.
ஆயினும் நாம்
நம்பிக்கை கொண்டே ஆகவேண்டும்.

ஒரு சோகப் பிரளயத்தை உள்வாங்கிய இதயங்களே
துயர் கரையும்வரை அழுக
கதறி இழுக
கண்ணீ¡விட்டு அழுக...

மனித அவலத்தின் உச்சியின்மேல் நின்று
ஒலிக்கும் உங்கள் கதறல்களில்
மனிதம் விழிப்புறட்டும்.
தேசம் இனம் மதம் கடந்து
இணைந்தது இத் துயா¢ல் உலகம் எமது
எதிர்பார்ப்பையும் மீறி என்ற செய்தியைப்
பற்றிக் கொள்ளுங்கள்
அழிவுகள் அடர்ந்த காடுகளினு¡டு
அதன் திசையற்ற வியாபகத்தினு¡டும்கூட
வாழ்வின்மீதான நம்பிக்கைகளை அடைவது
ஒன்றும் சாத்தியமற்றதல்ல.

ranr@bluewin.ch
\பதிவுகள், ஜனவரி 2005, இதழ் 61

24. கடலுக்கு மடல் 1 - கோவி.கண்ணன் (சிங்கப்பூர்)

கடல் தாயே! என்றழைத்த எங்களுக்கு
இதுதான் உன் அசுர அணைப்பா?

உப்புக்கு உன்னிடம் பஞ்சமா?
எங்கள் கண்ணீரையும் சேர்த்தெடுத்து சென்றாய்!

கொடுவாய் மீன் தெரிந்த எம்மக்களுக்கு !
உன் சுனாமி கொடுவாய் தெரியாது!

வஞ்சிரமீனுக்கு வலைவீசத்தெரிந்த நாங்கள்
உன் வஞ்சக அலையின் விலை தெரிந்திருக்கவில்லை!

சுறா மீன் பிடிக்க வலை செய்த நாங்கள் உன்
சுனாமி மீனுக்கு வலை செய்ய கற்றுக்கொள்ளவில்லை !

உன்னில் செம்மீன் பிடித்த எம்மக்களை
விண்மீன் பிடிக்கவா விண்ணுக்கழைத்தாய்?

கடலாடிய கட்டு மரங்கள்
கடல் (நீ) ஆடியதால் கவிழ்ந்தது !

இலங்கை கேட்கிறது.
இன்னும் எந்த இராவணனுக்காக
இப்படியொரு படையெடுப்பு?

செந்தமிழகம் உன்னால்
வெந்த தமிழகமானது!

மாலத்தீவு மரண ஓலத்தீவானது!

நாகப்பட்டினம்
உன்னால் சோகப்பட்டினமானது!

வேழம் புகுந்த சோளக்காடானது
ஈழம் !

தோணி மிதக்கும் தாய்லாந்தும் உன்
கோணிவாய்க்கு தப்பவில்லை !

அழகு அந்தமான் உன்னால் வேட்டையாடப்பட்ட
அலங்கோல மான னது!

வங்க தேசத்திற்கும் கிடைத்தது உன் சேத
பங்கு !

சோகங்களை சுமக்கும் சேமாலியாவிற்கு
நீ கொடுத்தது தான் மேலும்
சோகம் !

உன் அலைகளின் வலிமையை நீ உணராமல்
பர்மா சென்று தேக்கின் வலிமையையும்
அசைத்து பார்த்தாயா !

இந்தோனேசிய சுமத்ரா உன்னால் அழிந்தது தான்
அந்தோ பரிதாபம் !

நீ அளித்த உணவுக்கும்
உப்புக்கும் எங்கள்
உயிர்,உறவுகள்,உடைமைகள்?
உன் விலை ரொம்பவும் அதிகம்!

அழிந்துவிட்டோம் என்று எண்ணாதே!
மீண்டும் எழுவோம்!

இப்புத்தாண்டில் உன் அலைகளைப்போல
பன்மடங்கு!

25. கடலுக்கு மடல் 2 - கோவி.கண்ணன் (சிங்கப்பூர்) -

அரவணக்கும் அன்னையான நீ
அரவ அன்னை யானதேன் !

அளித்து மிளிர்ந்த உன் மேனி
அழித்து சிவந்ததேன் !

ஆரவார உன் அலைகள் பேர்
அரவ ஆரமாக மாறியாதேன் !

தைப் பொங்கல் வருவதற்கு முன் காலன்
மார்கழியில் செய்த கடல் பொங்கலா உன் சுனாமி !

சிற்றலை, பன்பலை வானொலிகளும் உன்
பேரலை பற்றி எங்களுக்கு உரைக்கவில்லையே !

கூறு போட்டு மீன் விற்ற உன் மக்கள் இன்று கூக்
குரலிட்டு கூட்டமாக குழிக்குள் !

மணல் வீடுகளை மட்டும் கரைத்து செல்லும் நீ
மணல் வீடு கட்டும் சிறார்களையும் அழித்து சென்றதேன் !

ஆழிக்குள் எழுந்த (சுனாமி) ஆலத்தை நீலகண்டன்
விழுங்காமல் தடுத்த பார்வதியா நீ !

மெழுகேற்றி பக்தி செய்த மக்களுக்காக உன்னால் மேரிமாதாவும்
மெழுகு பத்தி ஏற்றினாள் !

சாம்ராணி வாசம் செய்யும் நாகூர் உன்னால் சவ
சாம்பலும் வாசம் செய்தது !

புத்த விகார் நிறைந்த நன் நாடுகளின்
புத்திரர்கள் உன்னால் விகார மானார்கள் !

உன் மோச அலையில் உயர் துறந்தவர்களின்
உறவினர்களுக்காக

எம் உதவி நேச காரம்
உன் உயர அலைகளை விட
நெடிது நீளும் என்று நாங்கள் நிரூபிப்போம் !

geekay@singnet.com.sg
பதிவுகள், ஜனவரி 2005, இதழ் 61

26. கடல் பூகம்பத்தில் எமனாய் எழுந்த பூத அலைகள்! - சி. ஜெயபாரதன், கனடா

கங்கு கரையின்றி கண்ணுக்கு எட்டாது,
களைப்பும் அடையாது,
பொங்கிப் புரண்டு சுழற்றி
ஆயிரம், ஆயிரம்
சிங்கக் கால்கள் போல்
தாவிப் பாய்ந்து
தாக்கி
அலைகள் அடித்து அடித்து
ஆக்கிரமித்து
அங்குலம் அங்குலமாய்
நில மண்டலத்தைக் கைப்பற்றி,
கடல் நீரையும்
குடிக்க முடியாமல் உப்பிட்ட
ஓங்காரி,
ஆங்காரி அன்னை
அடிக்கடல் மடியில் உடுக்கடித்து
விரட்டி
ஒரே மூச்சில் எளியோரை விழுங்க,
வாய்திறந்த
பேய்த் திமிங்கலங்களை
கரைநோக்கி
ஏவி விட்டாளா?

கடல்கன்னி வயிற்றைக் கொட்டியது
கருந்தேளா?
அன்றிப் பெருந்தேளா?
கடற் சட்டிக்குள் வெடித்தது என்ன?
உடனே அதிர்ச்சியில்
அசுரக் குமிழி குடை விரித்ததா?
கடல்மாது
பெருத்த பீப்பாய் இடையில்
ஒட்டியாணம்
கட்டிய வண்ணம், யாரும் காணாது
தட்டி விட்டு

ஹைடிரஜன் குண்டை வெடித்தாளா?
புடைத்து வீங்கிடும் மேனி!
பொங்கிப் பொங்கி எழும்
கங்கை வெள்ளம்!

பூதக்கடல் விட்ட பெரு மூச்சால்,
கரையில் போட்ட
வரைக் கோடுகள் தாண்டி
நுழைந்திடும் பூத வெள்ளம்!
கடலைக் கலக்கி அடிக்கும்
ஆக்டபஸின் எட்டு வால்கள்
அசுர வடிவெடுத்து நாசம் செய்தனவா?
பூதேவி அடி வயிற்றில்
பூகம்பக் குத்து விட்டு
கடலைத் தூக்கி
கரகமாடி
எதிர்பாராமல்
கடற்படை மதில்களால் தாக்கி
கரை மக்களைக்
கொன்று குவித்து
தின்று ஏப்பம் விட்டு
பெருவயிற்றை நிரப்பிக் கொண்டாளா?

ஈழத்து விடுதலைக்குப் போரிட்டு
எண்ணற்ற வீர மாந்தர்
வாழாது உயிர் நீத்தார்!
அந்தோ
எந்த விடுதலைக்கு
இத்தனை உயிர் குடித்தாய்,
இலங்கா புரியிலே?
ஈராக் விடுதலைக்கு
ஏராள மான
ஏவுகணைகள் வீசி
அரேபியர்
ஈசல்போல் மாயும் இடுகாடு ஒருபுறம்!
விடுதலை வேண்டாம்,
வெளியேறிச் செல்லென்று

பிலாஸிடிக் வெடிகளில்
மார்க்க மற்ற
மக்களைத் துண்டாக்கும்
மூர்க்கர் சுடுகாடு மறுபுறம்!
மரணக் கல்லறையில்
இவையெல்லாம் போதாதா?
ஆண்டாண்டாய்ப்
பெற்று வளர்த்து பெயரிட்ட
பிள்ளைகளை
ஆங்காரி, ஓங்காரி வேறு
ஆயிரம் ஆயிரம் உடல்களைக்
கடல் உப்பில் கலக்கி
அலங்கோலமாய்
கருமாதி செய்வாளா?

சர்வ மாந்தரைக்
காத்திடும் அன்னை
கடற் கருமாதி செய்திடல்
தர்ம விதியா?
விதி யென்னும் குருடன்
சர்வ மாந்தரைச் சமாதியில் தள்ளும்
மர்மச் சதியா?
உன் வயிற்றில் உதித்த மதலைகள்
கடலில் மூழ்கிய போது
நின் கண்கள் இருண்டு
ஒருதுளி
நீர்மழை வரவில்லை!
அசுர உடம்புகளை நசுக்கி
பழகிப் போன
பரமனின் கூசாத பாதங்கள்
மனிதச் சடலங்கள் மீது
கடல் திடலில்
சடுகுடு ஆடும்!
உடுக்கை அடித்து தாண்டவம் ஆடும்
காலக் கூத்தன்
ஞாலத்தைக் குலுக்கி
கடற்படை மதிலால் அழித்து

நிரூபிப்ப தென்ன?
நிலையாமை என்னும்
புரியாத புதிரை மீண்டும்
நினைவூட்டு கிறானா?
பிரபஞ்ச முடிவைப்
பிரதிபலித்துத் திரையிடும்
பிரளயக் கூத்தின் ஒத்திகைப்
புராணமா?

குடிமக்களை ஒரு துடைப்பில்
வழித்து
முடிவோலை வாசித்து
விடுதலை அளித்த
இடுகாட்டு அன்னையே!
உயிரினத்தை
ஏனிந்தப் புவியில் மட்டும்
படைக்கிறாய்?
படைத்த பின்
ஏனிந்த
மானிடத்தை மட்டும்
ஞானமற்றுக் கொல்கிறாய்?
காடேறிக் கருமாதி யாகும் ஆத்மாக்கள்
சூடேறிக் கொதித்துப்
பாடும் ஓலம் இது:
புத்த களத்தை
செத்த களமாக்கிய தாயே!
ஓயட்டும் உன்
மாயத் திருவிளை யாடல்கள்!
ஒன்று நிலநடுக்கத்தை நிறுத்திவை!
இன்றேல் கூடுகளில்
கோடி கோடியாய்
குஞ்சுகள் பொரித்து வெளிவரும்
முன்பே
முட்டைகளை எல்லாம்
கட்டை மரத்தால் உடைத்து
சுக்கு நூறாக்கு!

jayabarat@tnt21.com பதிவுகள், ஜனவரி 2005, இதழ் 61

27. பேரலை - காருண்யன்

குழந்தைகள் தம் பொம்மைகளை
சூட்கேசினுள் பத்திரப்படுத்தின
தாய் குழந்தைகளைத் தனக்குள்
பத்திரப்படுத்தினாள் - இரகசியமாய்
புலம்பெயரவேண்டித்
தந்தை குடும்பத்தை
இரவுக்குள் பத்திரப்படுத்தினான்
ஊரோ பல குடும்பங்களைத்
தனக்குள் பத்திரப்படுதியது
எல்லா ஊர்களையும் சுனாமிப்பேரலை
தனக்குள் பத்திரப்படுத்தியது.

karunaharamoorthy@yahoo.ie
பதிவுகள், ஜனவரி 2005, இதழ் 61

28. உலக பெண்கள் தினம்: பங்குனி 8! நலங்கெடப் புழுதியில்..... பாரதி (ஜேர்மனி)

மண்ணுலகின் தேவதையாய்;
மானிடத்தின் தெய்வமாக்கி;
பெண்மையென்று படைத்தவனே இன்று..
பேச்சிழந்து நின்றிடுவான்.

கண்ணே! மணியே! என்று காதல் மொழிந்தவர்கள்
சொல்லால் எ¡¢க்கையிலே கல்லாய்ப் போனாயோ?
உன்னைப் பகிர்ந்து உன்னில் பாதியென்றவர்கள்
மண்ணில் எறிகையிலே மடிந்து மௌனம் கொண்டாயோ?

விலங்கிடா அடிமையாக்கி வீட்டினில் அடைத்தவர்கள்
விட்டிலாய் உன்னையாக்கி வேடிக்கை பார்த்தவர்கள்
குனியவைத்து உந்தன் குரல்வளை நொ¢த்தவர்கள்
குறுமதி கண்டு நீயும் ஊமையாய் மாறினாயோ?

ஜகத்தினில் ஜனனம் எல்லாம் உருவாக்கும் வலிமை பெற்றாய்.
அகத்தினில் அன்பு மட்டும் அருவியாய்ப் பெருக்கி நிற்பாய்.
இகத்திலே உன்னைப்போல இன்னுமோர் பிறவியுண்டோ?
இருளினைத் துடைத்தெறிந்து ஒளியினாய் நீ எழும்பு!

SRasadurai@aol.com
பதிவுகள், மார்ச் 2005, இதழ் 63

29. உள்ளே ஒரு வானவில்! - வைகைச் செல்வி-

தாழ் திறக்கும் என்றால்தான்
காத்திருத்தல் சுகம்.
இல்லையெனில்
மரண அவஸ்தை

கால மயக்கத்தில்
கண் விழித்துப் பார்க்கையில்
பகலா
இரவா
ஏதும் புரியவில்லை.

பகலுமின்றி
இரவுமின்றி
அந்திப் பொழுதாய் இருந்தாலும்
சில்லென்ற குளிர்காற்றும்
சிங்காரப் பூமணமும்
உன் முத்தம் தந்திடுமோ?

பகலென்று தெரிந்தால்
சிறகுகளை விரிக்கலாம்.
இரவென்று தெரிந்தால்
கூட்டிற்குள் ஒடுங்கலாம்.

தாழ் திறக்காவிட்டாலும்
இந்த மரண அவஸ்தை
அந்திப் பொழுதின் வானவில்.

vaigai_anne@yahoo.com
பதிவுகள், மார்ச் 2005, இதழ் 63

30. சிறு சோடிப் பாதங்களுக்கு ஒரு சலங்கை - சாரங்கா தயானந்தன் -

சிவந்த
உன் சிறுசோடிப் பாதங்களில்
சூட்டும் சலங்கையில் கோர்ப்பதற்குகந்த
முத்துப்பரல்கள் சில
சேர்த்துள்ளேன் என் செல்ல மகளே!
இறந்த காலத்தில்
நான் நடந்த பாதைகளில்
சேர்த்திருந்த அனுபவ முத்துக்கள்...
அவை
உன் தாய் வசித்திருந்த தேசத்தின்
ஓராயிரம் கதை சொல்லும்.
மென்தென்றல் பற்றி
மிக அழகு சொரிகின்ற
பொன்வெயில் படர்ந்த மண் பற்றி
மிதிக்க மனமொப்பா
வெண்மணல் வெளிகள் பற்றி
விரிந்து நீளும் வேனில் பற்றி
கண் துஞ்சா வீரர் போல்
கருநிறத்தில் மிளிர்ந்திருந்த
பெண் ஆண் பனைகள் பற்றி
பின்னொருநாள் கொடும் போரில்
தம் வடலிப் பிள்ளைகளொடு
தடமற்றும் தலையற்றும்
அவையழிந்த சேதி பற்றி
இடம் பெயர்ந்த எம் வாழ்வின்
அவலம் பற்றி
இருப்பிழந்த பின்னாலும்
எம் உரித்தாயிருந்த
நீயறியாச் சொல்லான
'சுயம்' பற்றி
நீள்நெடுங் காலமாய்
நம் மண் தாகித்திருந்த
சுதந்திர வாழ்வு பற்றி
சுனாமி எனும் பெயரில்
உயிர் குடித்த கடல் பற்றியென

சகலமும் உன்னிடத்தில் சொல்லும்.
முத்துப் பரல் பொதிந்த
அச் சிறு சலங்கை
வெண்பனி கொட்டும்
இத்தேசவாசியான
உனது காலுறைகளுள்
மிருதுவாய் வசிக்குமெனும்
கனவெனது.
வெளித்தெரியாத படியெனினும்
என்தேச உணர்வொற்றி
நீ வாழ வேண்டுமெனும்
நினைப்பெனது.
ஆயினும் ஒருவேளை
ஒளிதெறிக்கும் இச் சலங்கை
உன் வாழ்வின் போக்கிற்கு
இசையாதது கருதி
ஓரமாய் வீசப்படலாமெனும்
பாயமுமெனது.
எது வெல்லும்?
என் செல்ல மகளே
உன் அன்புத் தாயின்
கனவா? பயமா?

nanthasaranga@gmail.com
பதிவுகள், மார்ச் 2005, இதழ் 63

31. அதீத வாழ்வு! - சாரங்கா தயானந்தன்-

விரித்திருந்த வெண்தாளாய்
வாழ்க்கைவெளி .
வர்ணங்களும் தரப்பட்டிருந்தன.
ர்ணயிக்கப்பட்ட வர்ணங்களை
ராகரிப்பதில் பெருமையுறும்
என்னிடத்தில் ர்ச்சலனம்.
வர்ணங்களின் இணைவிலான
புதிய வரைவுருக்களை
மாற்றி மகிழ்ந்தது மனம்.
அவற்றின் முகங்கள்
எவரது கற்பனையுள்ளும் சிக்காது
இறந்து போன யுகத்தின்
அப்பாலும்
இனியொருநாள் வரும்
எதிர் காலத்திலும் உலவியதில்
என்மனத் திருப்தி.
ஆனால்.....
ஒரு தனித்த பாலையில்
தெளிவுற ஒளிர்ந்த
எரிநட்சத்திரத்தின் உதிர்வாய்
இளமை விலகிய னைப்பு
என்னை நேற்றுலுக்கிப் போகையிலே
தோற்றதுணர்ந்தேன்.
என் நரைகளினூடு தெரியும்
மற்றவர் திரைகளிலே
ஏதேதோ ஒவியங்கள்
கிறுக்கப்பட்டும் ...கீறப்பட்டும்...
என்னதோ வெறும்வெளியாய்...
ச்சே.....
வர்ணக்குழம்புகளை
விசிறியடித்துக் கொண்டாவது
வாழ்ந்து பார்த்திருக்கலாம்
ஒருமுறை.....

nanthasaranga@gmail.com பதிவுகள், மார்ச் 2005, இதழ் 63

32. வாசல்! - நெப்போலியன் (சிங்கப்பூர்) -

ஒருதடவை
குனிந்தபின்
இடிக்காது
வரவேற்கும்
வாசல்
உன்னுடையது.

வாயிலை
அகலமாக்கும்
முயற்சியில்
நல்வரவு
பலகையைச்
சேதமாக்கினாய்.

பிறகு
நுழைவாயில்
இதுவென
சொல்லி
விளங்கவைக்கும்
கட்டாயமும் ஏற்பட்டது.

பின்வாயிலை
முன்நுழைவு என
பிழையாய்
புரிந்தபடி
நுழைகின்ற
பலரின்
ஏமாந்த முகக்களையை
இப்பொழுதெல்லாம்
பலவேளைகளில்
பார்க்க நேரிடுகின்றது.

நீயோ
வாசலை இழந்த
வெற்றிடத்திற்கு

கதவுகளைத்
தேடிக்கொண்டிருக்கிறாய்.

உன்
வாசல்வழியே
நுழையும்
இந்தக் கவிதைக்கு
உன் சரியான
வாசல்
எதுவென்று தெரியும்
இருப்பினும்
பின்புறம் வழியே
அத்துமீறி
நுழைவதாய்
பின்புறத்திலிருந்து
தடுத்தபடி வருகிறாய் நீ !

வாசல் தொலைத்த
வாசலில்
கவிதை.

kavingarnepolian@yahoo.com.sg
பதிவுகள், மார்ச் 2005, இதழ் 63

33. வேலிகள்! - ஈழநாதன் -

சீராக பூவரசு
பலத்துக்கு,
இடையிடையே கிளிசறியா
ஆட்டுக்குக் குழைக்கு,
பாதுகாப்பைக் கூட்டவென
அங்கொன்றும்
இங்கொன்றுமாக
முட்கிளுவையும்
முள் முருக்கும்

நட்ட பின்னும்
மனம் கேட்கா அப்பா;
முட்கம்பி வரிச்சிட்டார்.

மேலே பனையோலை மறைப்பு
கீழே
அலம்பல் தடுப்பு
சீராகக்
கட்டி முடிக்கப்பட்டது
எங்கள் வீட்டு வேலி!

அதனால் கூட
தடுக்க முடியவில்லை
அதிகாலை ஒன்றில்
வீடுபுகுந்து மிரட்டிய
இராணுவத்தையும்,
அதனைத் தொடர்ந்து
அகதிகளாய் ஓடிப்போன
என்னையும்
உறவுகளையும்!!

eelanathan@hotmail.com
பதிவுகள், அக்டோபர் 2004 இதழ் 58

34. நிழல் நெசவாளர்கள்! - பிச்சினிக்காடு இளங்கோ -

இனிமேலும் நான்
வெட்டமாட்டேன்

இனிமேலும் நான்
பறிக்கமாட்டேன்

வெட்டி முறிக்கும்போதெல்லாம்
நாக்குத்தொங்கிய
வீட்டுப்பிராணியாய் உணர்ந்தேன்

இரத்தம் வடியவில்லை
கண்ணீர் வடிக்கவில்லை

ஆனாலும் என்னவோ
அவை
என்னோடு பேசுவதாய்
உந்தப்பட்டு
கண்ணீர் சிந்தாமலேயே
அழுகிறேன்!

பறிக்கிறபோது
காதுகளைக்
கிள்ளி எடுப்பதாகவே
அர்த்தப்படுகிறேன்

இனிமேலும்
எப்படி முடியும்?

அவைகளும் கைகளே
மனசு
இரத்தம் வடிக்கிறது
வெட்டுவதும் பறிப்பதும்
இனி இல்லை

காற்றைச் சலிப்பவர்களை

உயிர்ச்சத்துக்களை
உணவாய்க் கொடுப்பவர்களை...
கண்களையும்
மனத்தையும்

வண்ணச்சிரிப்பால்
கட்டிப்போட்டவர்களை...

மணம் தயாரிக்கும்
மகோன்னதமானவர்களை...

இலைகளால்
நிழல் நெசவு
நெய்பவர்களை...

இனிமேலும் நான்
காயப்படுத்தமாட்டேன்.

ilango@stamford.com.sg
பதிவுகள், செப்டெம்பர் 2004, இதழ் 57

35. கழுதைகளுக்குத் தெரியுமா...... - நெப்போலியன் (சிங்கப்பூர்)

யார் சொன்னது ?
கழுதைக்குத் தெரியுமா...
கற்பூரவாசனையென்று !

கற்பூரத்திற்குத் தெரியுமா...
முதலில்
கழுதையின்
வாசனை என்னவென்று ?

உதைப்பது கழுதையெனில்
மணப்பது கற்பூரம்.
சுமப்பது கழுதையெனில்
எரிப்பது கற்பூரம்.

குட்டிச்சுவரையும்
கழுதைகளையும்
தயவுசெய்து
ஒப்பிடாதீர்கள்
அது
அ·றி¨ணையையும்
உயர்திணையையும்
அவமானப்படுத்தும்
செயலாகும்.

புரிந்த கழுதைகள்
புரியாத கழுதைகள்
புரிந்தும்
புரியாததுபோல்
முடக்குவாத கழுதைகள்
நன்றிகெட்ட கழுதைகள்
நியாயம் பேசும் கழுதைகள்
நட்பின் கழுதைகள்
என,
கழுதைகள்...... பலவகை.

சத்தியக் கற்பூரம்
சாமிக் கற்பூரம்
நித்தியக் கற்பூரம்
நெடிக்கற்பூரம்
பச்சைக்கற்பூரம்
பாசக்கற்பூரம்
உயர்ந்த கற்பூரம்
ஊத்தல் கற்பூரம்
என,
கற்பூரங்கள்...... பலவகை.

கழுதைக்கும் - கற்பூரத்திற்கும்,

இது மாநிறம்
அது வெள்ளைநிறம்.

இதற்கு மூக்கழகு
அதற்கு நாக்கழகு.

இவைகளின் சொத்து பொதிகள்
அவைகளின் சொத்து புண்ணியங்கள்.

இதன் முகம் அதிர்ஷ்ட ஓவியம்
அதன் முகம் அருவ நர்த்தனம்.

கழுதைகள் கவனிக்கப்படவேண்டியவை
கற்பூரங்கள் காக்கப்படவேண்டியவை.

கற்பூர மயக்கத்தில்
கழுதைகள் அசைபோடுவதும்
கழுதைகளின் பாடலுக்கு
கற்பூரம் நடனமிடுதலும்
தோழமைத் தொடர்...

என் கழுதை
உன் கற்பூரம்
என்றபடி

என்றேனும்
இரண்டும் மல்லுக்கட்டினால்
உதைகளுக்கான தூபங்கள்
அங்கே தயாராகிவிட்டன
என்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

எங்கேனும் கழுதைகளைப்
பார்த்தால்
மண்டியிட்டு வணங்குங்கள்
உலகின் உச்சக்குரல்
உங்களுடையதுதானென்று !

கமழ்ந்து கொண்டிருக்கும்
கற்பூரங்கள் அருகிலிருந்தால்
கண்களில் ஒற்றிக்கொள்ளுங்கள்
ஆயுசின் நிரந்தரமின்மையை
அறிவிக்கும் அற்புதமானியென்று !

கழுதைகளும் கற்பூரமும்
நல்ல இணைகள்
கற்பூரப்பொதிகள்
கழுதைகளின் முதுகில்
ஏற்றப்படாதவரை...
கற்பூரத் தீபங்கள்
கழுதைகளின் தும்மல்களால்
தொந்தரவு செய்யப்படாதவரை...

கழுதைக்குத் தெரியுமா...
கற்பூரவாசனையென்று ?
இனிமேலும்
சொல்லிப்பழகாதீர்கள்
கழுதைகளின்
சங்கதி
வாசனைகளுக்கு
அப்பாற்பட்டது.

kavingarnepolian@yahoo.com.sg பதிவுகள், அக்டோபர் 2004, இதழ் 58

36. கா-க்-கை! - மொனிக்கா (நியூயோர்க்)

ஒட்டில் இடப்பட்ட அணிற்குஞ்சு
மதிய வெய்யிலில் வீட்டிற்குள்
எட்டிப் பார்த்தது.

நெடுநாள் சிநேகம்,
கடும் சண்டை, கோபம்,
பணக்கூட்டல், அன்புக்கழித்தல்
பலவும் சிந்தித்துப் பயணப்பட்டான்.

ரோட்டின் மிக அருகில் வீடு.
நெருங்கத் தொலைவுற்றது.
சாமான்யச் சூரியனோ சட்டைதாண்டி
வாட்டி வருத்திற்று.
சாவுக்குச் சம்பிரதாயம் தவறாதே
என
வரிக்கு வரி சொல்லி வந்தான்.

நியாயப் படுத்த வலிந்தால்
நினைவுப் பாதையொன்றும்
நேர்ப் பாதையாய் தெரியவில்லை.
உணர்வு வந்தவனாய் ஒப்பாரி
கேட்டு நின்றான்.

கூட்டம் உள்ளிருக்க
கூரைக்கு மேல் பார்த்தான்.
காக்கை கைபற்ற கத்திற்று அணிற்குஞ்சு.
விரட்டினான் கருமையை
வீட்டிற்குள் விட்டான் குஞ்சை.

வெய்யில் சகித்ததொன்னும்
வீண்போகவில்லை என்றான்.
துன்பம் கைபற்றத் தூக்கிவிடல் மனிததர்மம்.
எண்ணம் தலைக்கேற
எளியனாய் திரும்பி வந்தான்.

கனவு கலைந்தெழும்ப கழுத்தை
நிமிர்த்திப் பார்த்தான்.
கூரையில் அணிற்குஞ்சு.
பகற்கனவு வேண்டாமென்று வழமைபோல்
மனைவி வைதாள்.

monikhaa@hotmail.com
பதிவுகள், நவமப்ர் 2004, இதழ் 59

37. உழவு! - ஈழநாதன்

மாரிகாலம் தொடங்க முன்
வயலை உழவேண்டும்
உழவு இயந்திரம்,
கந்தன்,முருகன்
மற்றும்..
கண்ணியகற்றும் குழுவுக்கு!!
சொல்லியனுப்பிவிட்டு
காத்திருக்கும்
விவசாயி!!

eelanathan@hotmail.com
பதிவுகள், ஜூலை 2004, இதழ் 55

38. இயற்கையொன்றி இருத்தல்! - - வ.ந.கிரிதரன் -

விரிந்திருக்கும் வெளியில் விரையுமிந்தக்
கோளின் வனப்பும், கதியும்,
உயிரின் இருப்பும், அதற்கான சாத்தியமும்,
விந்தைக்குரியவை; அற்புதமானவை என்று
வேண்டுமானாலும் கூறிக்கொள்ளலாம்.

சிலவேளைகளில் விருட்சங்களின்
இயல்பும் வாழ்வும் என் சிந்தையில்
பொறியேற்படுத்துவதுண்டு.
அப்பொழுதெல்லாம் அவற்றின் வாழ்க்கை
பற்றிச் சிறிது ஆழமாகச் சிந்திப்பேன்.
ஒளியும், வளியும் விருட்சத்தின்
இருப்பு; எம்முடையதைப் போல.
ஒன்றின் கழிவில் அடுத்ததன்
உயிர்ப்பு.
விருட்சத் தோழரைப் போல்
வாழுதற்குணவு தயாரித்தல் சாத்தியமா?
என்று அப்பொழுதெல்லாம்
சிந்திப்பேன்.
அதற்குரிய ஆற்றல் எம்முள் உண்டா
என்று அப்பொழுது நான்
ஆழமாக யோசிப்பேன்.
இருதயத் துடிப்படக்கி
இருத்தல் இலகுவானதா
என்றெல்லாம் சிந்தனைகள்
இறக்கை விரிக்கும் சமயங்களவை.
மாரித்தூக்கத்தின் சாத்தியம்
மிருகங்களுக்கு மட்டுமா
சாத்தியம்? என்றும் அப்பொழுது
எண்ணுவேன்.
அவை மட்டும் சாத்தியமானால்
- ஆம் அதற்குரிய சாத்தியங்கள்
விந்தைகள் நிறைந்த,
புதிர்களின்னும் புதிர்படாத,
இருப்பில் நிறையவே

இருக்கின்றதனதான். -
இருப்பிற்காகக் கொல்லுதல் தவிர்த்து,
இருப்புக்காக விருட்சமழித்து,
இயற்கையொன்றி இருந்திடுமொரு
இருப்பில்தான்
எத்துணை வனப்பு! எத்துணை களிப்பு!

ngiri2704@rogers.com
பதிவுகள், பெப்ருவரி 2005 இதழ் 62

39. நோதலற்ற காதலுக்காய்.... - - வேதா இலங்காதிலகம் (டென்மார்க்) -

காலம் காலமான காதல் விழுது
ஆலம் விழுதாய் மனதில் ஊன்றாது
நீலம் பாரிக்க பெண்ணின் மனதை
ஆழமிடுவதேன் சில ஆண்களின் சித்திரவதை.

நாலும் தெரிந்தவன் ஆண் தானென்று
கோலம் காட்டி தான் சீலமகனென்று
பெண்ணை அவமதிக்கும் பெருங் குடியாளருக்கு
எண்ணத்திலும் ஏன் காதல் மனமொன்று.

காதலெண்ணம் கனவு மெய்ப்படும் பூவனம்.
நோதலின்றி நெஞ்சம் அணைக்கும் சொர்க்கவனம்.
ஆதலினால் புரிந்துணர்வு பெருக்குங்கள் அனுதினம்.
தீதில்லாக் காதலே அதியுயர் ஆதனம்.

காதலில் ஈதல் எடுத்தல் வேதனம்.
மோதல்- வாதிடல் வன்முறை வருமானம்.
நோதலற்ற காதலுக்காய் மனிதர் உதிக்கட்டும்.
அல்லாதார் கருவரையில் உதிக்காமல் போகட்டும்.

பதிவுகள், ஏப்ரல் 2005 இதழ் 64 -

குர்திஸ் கவிதைகள்! தமிழில்: யமுனா ராஜேந்திரன்

40. அம்மா நீ குளிர்பருவமல்லவே! - கமால் மிராவ்தலி ;தமிழில்: யமுனா ராஜேந்திரன்

அம்மா போனவருஷம் நான் உன்னைச் சந்தித்தபோது
நீ இவ்வளவு மோசமாக இருக்கவில்லை
உனது முடி நீண்டு நன்றாகக் கறுத்திருந்தது
என்றுமே உருகாத இந்த நிரந்தரப்பனி
எப்போது உன் தலைமேல் வீழ்ந்தது?

அணைக்கவே முடியாத இத்தீச்சுவாலை
என்று உன் இதயத்தில் பற்றியது?

அம்மா பனியையும் தீச்சுவாலையையும் ஒருங்கே கொணர்தற்கு
நீ குளிர்பருவமல்லவே
எவ்வாறு நீ உன் கடைசித்துளியையும் உறிஞ்சி முடித்தாய்?

கறுப்பு மேகம் சூழ நரகத்திலிருந்து வந்தமாதிரி
தோற்றம் தருகிறாய்
உனது கருஞ்சிவப்பு உதடுகள் முழுக்கவும் சுறுக்கங்கள்
புன்னகைகள் அதற்குள் புதைந்து போயின

அம்மா
உன்னை நீ கவனித்துக் கொள்கிறாயா என்ன?
உன்னிலிருந்து உன்னை எவர் திருடிச் சென்றார்?

உனதுவிழிகள்
உனதுபார்வையைத்தேடித்திரிகிறது
உனதுசெவிகள்
உனதுகேள்;மையைத்தேடித்திரிகிறது
உனதுநாவு
உனதுசொல்லுக்குஅ¨கிறது
உனதுசுவாசப்பை
உனதுமூச்சுக்கு அவாவுகிறது
உனது ஆன்மா,
அம்மா நீ உயிரோடு இருக்கிறாய்,

உனது வாழ்க்கையைத் தேடுகிறது

இந்த நிலையில
;என்றுமே உனை நான் பார்க்க விரும்பியிருக்கவில்லை
சென்ற வருஷம் நான் வந்தபோது
நீ இம்மாதிரிமோசமான நிலையில் இல்லை

இது நான் அம்மா
உன் மகன
;அம்மா என்னை ஞாபகப்படுத்திப்பார்
நான் உனதுபார்வை
உனது கேள்வி
உனது குரல்
எனக்குள் ஆழ்ந்து முச்சுவிடு அம்மா
எனது இதயக்குருதியை உனக்குத் தரஎன்னை விடு அம்மா

அம்மா என்னை விட்டுப்போகாதே
பொறு
என்னோடு கொஞ்சம் இரு

நாளை வரை பொறுத்திரு அம்மா

41. நாம் வாழும் காலம்! - லத்தீப் அஹ்மத் ; தமிழில்: யமுனா ராஜேந்திரன்

நாம் வாழும் காலம்
பொக்கையானஅலங்கரிக்கப்பட்ட வார்த்தைகளின்காலம்
போலியாகக் கும்பிட்டு வாழும் கவிகளின் காலம்
வியாபாரமயமான சிந்தனை மூளை
மற்றும் இதயத்தின் காலம்

ஒன்றாகவோ கூட்டமாகவோ நாம் சாவதற்காக
மரணம்
ஒவ்வொரு தெருமுனையிலும் காத்திருக்கிறது
கொஞ்சம் எதிர்;பார்ப்பாயினும்
சாவு உனது காவலாள்
உனது சேவகத்திற்கு நிற்கிறது
நம் காலம் குழப்பங்களின் சிக்கல்களின் காலம்
ஓவ்வொரு வார்த்தையும்
நூற்றுக்கணக்கான தானியங்கி
எலக்ட்ரானிக் சாதுரியங்களில் சிறைப்படுத்தப்பட்ட
வார்த்தைகளின் காலம்

முதலாளித்துவ நலன்களுக்குச் சேவகம் செய்ய
நல்லது கெட்;டதுக்கிடையில் அழிவுவேலை செய்ய
நாம் கற்றுக் கொள்ள வேண்டும்

ஐஸ்கிரீமைவிட முடியலங்காரங்களை விட
கழுத்து அங்கிகளைவிட
முத்தங்களைவிட நாம் உண்மையை நேசிக்க வேண்டும்

42. நிலம்! - ஸெர்கே பேகஸ் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

ஒரு மரத்தின் வாதைத் தொட்டேன்
வலியில் நடுங்கியது அது
கிளையில் நான் கைவைத்தபோது
மர உடல் அழுதது

மரத்தை நான் தழுவியபோது
என் கால் நிலம் நடுங்கியது
கற்கள் புலம்பின

இவ் வேளை
நான் குனிந்து ஒருபிடி மண்ணை எடுத்தபோது

முழு குர்திஸ்தானும் அழுது புலம்பியது.

43. கற்கள்! - லத்தீப் அல்மத் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

கற்கள்
சந்தோஷத்தையோ துக்கத்தையோ உணர்வதில்லை
அது எவரையும் வெறுப்பதோ நேசிப்பதோ இல்லை

காதலில் ஈடுபட கற்களுக்கு இதயமும் இல்லை
தமது காதலர்களுக்கு
கடிதங்களோ கவிதைகளோ எழுத
அவற்றுககுக்; கைகளும் இல்லை

வீதிக்கு வீதி துரத்தி
அவை காதலுக்கு அலைவதுமில்லை
காவலர்கள் கைது செய்ய வரும்போது
கற்களுக்கு
ஓடுவதற்குக் கால்களுமில்லை

இறந்துவிட்டால் அழுவதற்கு
அவைகளுக்கு அம்மாக்களும் இல்லை
தவறான வழி நடந்தால் நெறிப்படுத்த
அவைகளுக்குத் தகப்பன்களும் இல்லை

தம்மை அர்ப்பணிப்பதற்காக கற்களிடம்
குறிப்பிட்ட தேசமும் இல்லை
எங்கே இவைகள் கிடக்க நேர்கிறதோ
அங்கேயே ஓய்வாக இருப்பதற்கு இடம்பிடிக்கும்
இறுக்கமாக இருந்துவிடும்

கற்கள்
தமது கடந்தகாலத்தை நினைக்கமுடியாது
அவைகளுக்கு நினைவுகளை மீட்கவும் முடியாது
மாறாக இருந்திருந்தால்
எப்போதேனும் அவை
ஒரு கவிதையோ ஒரு கடிதமோ எழுதியிருக்கக்கூடும்

இவையெல்லாம் இருந்தாலும் கூட
நமது மூதாதையர்கள் சொல்லியிருக்கிறார்கள்:

கற்கள் அவை இருக்கும் இடத்துக்கே பாரம்
சில மனிதர்களும் அப்படித்தான்

44. விழிப்பு! - அப்துல்லா பெஸ தமிழில்: யமுனா ராஜேந்திரன்

மூன்றிலிரண்டு பகுதி இரவு கடந்துவிட்டது
தூங்கு என் மகவே
எனது உள்ளங்கையில் தலைவைத்துக் கொள்
எனது தோள்களில் படுத்துக் கொள்
நான் தூங்கக்காத்திராதே
நான் விழித்திருக்க வேண்டும்
நான் தூங்கமுடியாது

நீ படுத்தவுடன் தூங்கிப்போவாய்
இயற்கை கடின முகம் கொண்டது
அதன் மூச்சு கடினமானது

காற்றின் ஸப்தம்
மரங்களின் இரைச்சல்
மேகங்களின் உறுமல்
மழைத்தூறல்

;கடவுளே-
உன்னை எழுப்பிவிடும் என்று நான் பயப்படுகிறேன்
கண்ணே
உனது கனவுச் சங்கிலியின்
சின்ன இழைகளை அறுத்துவிடுமென

தூங்கு என் மகவே
எனது உள்ளங்கையில் தலைவைத்துக்கொள்
எனது தோளில் சாய்ந்து கொள்
நான் தூங்கக் காத்திராதே

உன்னைப் பாதுகாக்க
நான் தூங்காதிருக்க வேண்டும்
நான் தூங்கமுடியாது.

45. விதைகள்! - ஸெர்கே பேகஸ் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

நாங்கள் பத்துலட்சக் கணக்கானவர்கள
;நாங்கள் மூத்த மரங்கள்
புதிதாக வளரும் செடிகள்
விதைகள்
அங்காரா தலைக்கவசத்திலிருந்து
விடிகாலையில் அவர்கள் வந்தார்கள்
எங்களை வேரோடு பிடுங்கினார்கள்

46. .ஒரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்! - மெஹ்ரம் அஸ்லம் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

எம்மைத் தொலைதூரம்
வெகு தொலைதூரம் எடுத்துச் சென்றார்கள்
வழியில் நிறையப் பழைய மரங்களின் தலைகள் உதிர்ந்தன
குளிரில் நிறைய புதிய செடிகள் இறந்தன
காலடியில் நிறைய விதைகள சிதறி
தொலைந்து காணாமற் போய் மறந்துபட்டன

கோடைக் காலத்தின் சன்னமான நதிபோல்
நாங்கள் கசிந்தோம்;
இலையுதிர் காலத்தினுள் பறவைக்கூட்டம் போல
நாம் மறைந்தோம்

ஆயிரக்கணக்கில் மங்கலாகினோம்
எம்மிடம் விதைகளிருந்தன
காற்று மறுபடி கொண்டு சேர்த்த விதைகள்;
பசிகொண்ட மலைகளை மறுபடி அவை சேர்ந்தன
பாறைகளின் வெடிப்பில் அவைமறைந்து கொண்டன

முதல் மழை
இரண்டாம் மழை
மூன்றாம் மழை

மறுபடி அவை வளர்ந்தன
மறுபடியும் நாங்கள் ஒரு ஆரண்யம்

நாங்கள் பத்துலட்சக்கணக்கானவர்கள்
நாங்கள் விதைகள்
செடிகள்
மூத்த மரங்கள்

பழைய தலைக்கவசம் செத்தது
இப்போது
நீங்கள் புதுத்தலைக்கவசம்
ஏன் நீங்கள் ஆகாயத்தின் தலையை

உங்களின கீழ்வைக்கப் பார்க்கிறீர்?

எனக்குத் தெரியும்
அது உங்களுக்கும் கூடத்தெரியும்
மழைக்கும் காற்றுக்கும் ஓரேயொரு விதை இருக்குமட்டும்

இந்த ஆரண்யம்
எந்நாளும் முடிவுறாது

பதிவுகள் © 2020

47. ஜனனம்! - ரபீக் ஸபீர் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

ஒரு குளிர் உறைந்த குடிசையில்
பலத்த மழையின் இடையில்
பசியோடு
பயத்துடன் நடுங்கியபடி நண்பனற்று
மருத்துவச்சி இல்லாமல்
அவன் பிறந்தான்

ஒரு புகை மண்டிய குகையில்
கதறல்களுக்கிடையில்
இராணுவ டிரக்கில்
ஒரு கூடாரத்தின் கீழ்
காயத்தின் உள்ளே
அவன் பிறந்தான்

எம் மக்களை
அவர்கள் வெட்டிச் சாய்க்கும் வேளை
அவன் பிறந்தான்
வெடிகுண்டுச் சிதறலின் கீழ்
ஜ_வாலையில்
ஒரு குர்திஸ் குழந்தை பிறக்கிறது

எதிர்த்து நிற்க
கலகத்தில் ஈடுபட
ஒரு குர்திஸ் குழந்தை பிறக்கிறது

48. என்றாலும்! - லத்தீப் ஹல்மத் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

இந்த உலகின்
வரைபட வடிவத்தை முழுக்கவும்
நீ சுவடேயில்லாமல் அழித்து விட்டாலும் கூட

இன்னும் இந்தப் பூமியை
நீ ஒரு சின்னா பின்னமான நூலுருண்டையாக
கட்டுடைப்புச் செய்தாலும் கூட

எப்போதெல்;லாம்
எல்லைகள் மறு வரையறை செய்யப்படுகிறதோ
அப்போதெல்லாம் இந்த நகரத்திற்கு
நான் மறுபடியும் வருவேன்

குர்திஸ்தானில் மட்டுமே
என் சொந்த வீட்டை நான் அமைத்துக் கொள்வேன்-

49. . குர்திஸ் குழந்தை! - ஸர்பாஸ் கார்குகி

மனித குலத்துக்கு மனசாட்சி இருக்கிறதெனில
எனக்கு ஏன் ஒரு இடம் இல்லை?
உலகத்தில் எனக்கொரு இடம் இருக்கிறதெனில்
எனக்கென ஏன் ஓரு பூர்வீக வீடு இல்லை?

எனக்கென ஒரு இடமிருந்தால்
அது ஏன் அழிக்கப்பட்டது?
அது ஏன் எப்;போதும் சிதறடிக்கப்படுகிறது?
என் வீட்டில் ஏன் துப்பாக்கி துளைத்த
துளைகள் இருக்கிறது?
எனக்கொரு இடம் இருந்ததெனில் அது ஏன்
எரிக்கப்பட்டது?

நூற்றாண்டுகள் வருகிறது
நூற்றாண்டுகள் போகிறது
நான் ஓரு அகதி
மலைகளில் தொலைந்த விருந்தாளி
அழிப்பவர்கள் வருகிறார்கள்
அழிப்பவர்கள் போகிறார்கள்
ஓரு இடமோ பெயரோ இல்லாமல்
நான் விதிக்கப்பட்டிருக்கிறேன்

முழு உலகமும் உன்னுடையது எனும்
அம்மணப் பொய்யில் அர்த்தம் இல்லை
முழு உலகமும் உன்னுடையது என்பதுதான்
இந்த யுகத்தின் மிகப் பெரிய பொய்;

போதும் போதும்
பொய்கள் போதும்
வேண்டாம் பொய்கள் இனிமேல்

வெற்றுப் பதாகைகளை
உயர்த்துவதை நிறுத்துங்கள்

நான் ஒரு குர்திஸ் குழந்தை

எனக்கென்றொரு வீடு இல்லை
நான் ஒரு குர்திஸ் குழந்தை
எனக்கென்றொரு இடமில்லை

குர்திஸ்தானுக்கு ஒரு கொடி கிடைக்கும் வரை
குர்திஸ் குழந்தைக்கு வீடு இல்லை
நிஜமான எல்லைகள் இல்லாதவரை
குர்திஸ் குழந்தைக்கு வீடு இல்லை

நான் ஒரு குர்திஸ் குழந்தை
எனக்கென்றொரு வீடு இல்லை
நான் ஒரு குர்திஸ் குழந்தை
எனக்கென்றொரு இடமில்லை

50. ஓரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்! - மெஹ்ரம் அஸ்லம் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

ஒரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்

அச்சிநேகம் ஒரு பறவை
நான் அதன் சிறகு
அச்சிநேகம் ஒரு மீன்
நான் கடல்
அச்சிநேகம் ஒரு விதை
நான் நிலம்
அச்சிநேகம் ஓரு மனிதன்
நான் இயற்கை

அது சாத்தியமாகுமானால்
அது சாத்தியமாகுமானால்
அது சாத்தியமாகுமானால்

ஒரு சிநேகம் பற்றி நான் யோசிக்கிறேன்

அதனோடு சேர்ந்து
அவனோடு சேர்ந்து
அவளோடு சேர்ந்து

சேர்ந்து சிந்திக்க
சேர்ந்து செயல்பட
வெற்றி கொள்ள
வெற்றி கொள்ளப்பட
சேர்ந்து சிரிக்க
சேர்ந்து அழ

இருள் நாட்களின் சூரியன்
ரொட்டிக்கு உப்பு
காயத்துக்குத் தேன்
வாழ்வதற்குத் தகுதியான இந்த உலகில்

அது சாத்தியமாகுமானால்

அது சாத்தியமாகுமானால்
அது சாத்தியமாகுமானால்

51. வைகறை! - கமால் மிராவ்தலி தமிழில்: யமுனா ராஜேந்திரன்

உனது ஆன்மாவுக்கு மரியாதை செய்யும் பொருட்டு
இன்னுமொரு பாடலை நான் பாடுகிறேன்
உனது வருகையின் சந்தோஷத்தைக் கொண்டாடும் பொருட்டு
இன்னொரு லயம் எழுதுகிறேன்

எனது சாட்சியம்
ஒரு சொல்லப்படாத கதை
தகிக்காத ஜ+_வாலை
பாடாத பாடல்

உனது உதடுகளிலல்லாது அகரவரிசையை நான் வேறெங்கிருந்தும்
கற்கவில்லை
உனது உள்ளங்கையிலல்லாது
உலகப்படத்தை நான் வேறெங்கும்

ஞாபகம் கொள்ள முடிந்ததில்லை

எனது
உணர்ச்சிகளை எதுவும் வரையறை செய்ய இயலாது
உனது வதன பிரபஞ்ச வெளியன்றி

எனது இதயத்தின் மீதமர்ந்திருக்கும்
புறாவின் முணுமுணுப்பைக் கேள்
வறியவரின் துயரை பிரபஞ்ச கானமாக்கும்
அந்தத் தூய நதியின் ரகசிய மொழியைக் கேள்

எனது மௌனக் கண்ணிவெடியை நான் எங்கெங்கும்
புதைத்திருக்கிறேன்
ஓவ்வொரு வான் அலையிலும் ஒரு எதிர்த்தாக்குதலை
வைத்திருக்கிறேன்

ஒரேயொரு நிமிடமேனும்
இந்த உலகம் மௌனத்தில் ஆழ்ந்து போகட்டும்

நட்சத்;திரங்களின் பாஷையை நான் அறிந்து கொள்வேன்

ஒவ்வோர் இரவும்
கணக்கிலடங்காச் செய்திகளை நான் அனுப்ப வேண்டும்
ஒவ்வொரு கிசுகிசுப்பும் வைகறையின்
மணத்தைக் கொண்டிருக்கும்
எனது ஒவ்வொரு தெறிப்பும் சந்தோஷ அதிர்வுகளாகி
உனது இதயக்கூடையை நிரப்பும்

உன்னையறியாமலே
உயிர்வாழும் காயமொன்றிற்கு; அடைக்கலம் தரும்
சிறகடிக்கும் பாடலாக நீ ஆவாய்
வைகறையின் கிளைகளில் நீயுன்
கூட்டை அமைப்பாய்:

நாளை வனாந்தரங்களின் கொண்டாட்டம்
பசுமை பூப்பதற்கு வசந்தம் மருத்துவச்சி ஆகும்
வெள்ளித் தாம்பாளத்தில் என் சிரத்தை வைத்து
வருஷப் பிறப்பன்று தருவேன்

உனது வாழ்த்துக்களை என் மீது பொழிவாயாக

எனது நெற்றியைத் தடவு
என் கண்களின் மீதிருக்கும்
இளம்ஞ்சள் பூக்களைப்பார்
தொடுவான் இரத்தத்தில் அவை மூழ்குகின்றன
இதுதான் வைகறையின் வெகுமதி

இளைஞர்களே யுவதிகளே
நாம் நடனமாடுவோம்
ஆடுங்கள் ஆடுங்கள் ஆடுங்கள்
இந்தக் கிளர்ச்சி முடிவுறாதிருக்கட்டும்

காதலனால்;
காதலின் பொருட்டு நாம் தகிக்கிறோம்
எமது தேகங்களின் ஜ_வாலை கொண்டு
காதல் மதத்தை நாம் எழுதுகிறோம்

வைகறை எனது இருப்பபிடம்

அடர்ந்த மூடுபனியின் உச்சியில் நான் அமர்ந்திருக்கிறேன்
விடியலின் வெளிச்சப் பக்கங்களை நான் புரட்டுகிறேன்
அழகின் வானவில் நிறங்களை நான் உச்சரிக்கிறேன்
ஒளியின் மொழியை அறிகிறேன்
உனது விழிகளின் கவிதைகளுக்கு
அஞ்சனமாய் அதைப் பூசுகிறேன்

நான் காதல் கிறுக்குப் பிடித்த வானம்பாடி
இலையுதிர் காலக் கிளைகளில்
எனது கூட்டை அமைக்கிறேன்

உறைகுளிர் காற்றுக்கு என் இதயத்தை நான்
திறப்பேன்
தோட்டத்தின் முதல் மொட்டு
பூப்பபதற்காக நான் காத்திருப்பேன்

மிகமிக மென்மையான ரோஜாவை நான் பறிப்பேன்
உனது உள்ளம் அதன்
நிரந்தரத் தாதியாக நான் அதைத் தருவேன்

வைகறை உதயத்தில் நாளை
எனது சஞ்சலமான முகத்தை நான துடைத்துக் கொள்வேன்
சூரியனின் நிரந்தரப் பயணத்தை நான் தொடர்வேன்
ஏவாளின் முதல் புன்னகையை மீட்கும் வரை

பிற்பாடு
உனது ஆதி உதடுகளில் அதை நான் பொறிப்பேன்

நாளைய ஜன்னல்களிலிருந்து
எனது தளர்ந்த கைககள் மறுபடி தோன்றும்
புத்தம் புது பனிபோல்
சு¢வப்புப் பேனாவுடன் நான் வருவேன்

வரலாற்றை ஆதியிலிருந்து மாற்றி எழுதுவேன்
அனைத்தினதும்
அறியப்படாத பெயர்களை விளித்து
அப்புறம் நான் உனை அழைப்பேன் என் காதலென

உனது மார்புகளின் அடர்ந்த கிராம்பு வாசம்தான்
எத்துனை அற்புதமானது
வைகறையின் மணமஅதில் நிறைந்திருக்கும்
உனது கரங்களில் வீழ்ந்து நான் தூங்கிவிடாதிருக்க வேண்டும்
தயவு செய்து சூரியனை உதிக்கவிடு
நான் திடுக்கிட்டு விழிக்காதிருக்கச் செய்

நாளை எனது பேனாவின் முனையை
எனது எதிரிகளின் மார்பினின்று விலக்கி
அழகிய மலர்களின் இதயங்களில் அதை நனைக்கவேண்டும்
ரோஜாக்கின் கறுஞ்சிவப்புக் கண்ணீரும்
ஒளியின் புன்னகையும்
சேர்ந்நதொரு மை தொடுவேன்

குர்திஸ்தானின் எல்லா மரங்களிலும்
எல்லாக் கற்களிலும் நான் எழுதி வைப்பேன்

நான் உன்னை நேசிக்கிறேன்

எனது ரோஜாவே

வாட்டமுறாதே
எனது கைகளில் வந்து விடு;
இந்த ஆழ்ந்த புண்கள்
உன்னை நடுங்கச் செய்யாதிருக்கட்டும்

எமது நாளைய தினத்துக்கு
எமது விடியலுக்கு இவைதான்
படிக்கற்கள்.

52. கார்னவெல்லி குன்றுகள்: - அடையாளமற்ற கெரில்லா பெண்கவி தமிழில்: யமுனா ராஜேந்திரன்

எவ்வாறாகத்தான் நான் அக்குன்றுகளை நேசித்தேன்!

நான் கோபத்தில் கொதித்துக் கொண்டிருக்கிறேன்
நான் வன்மங் கொண்டிருக்கிறேன்
நான் துக்கமாயிருக்கிறேன்
இந்தத் தாங்கவொணா வலியை நான் வெல்லவேண்டும்
அழுகையினால் என் இதயம் சூலுற்றிருக்கிறது
கைம்மாறு செய்யப்படா அன்பின் பாடல் போல்

எனது சின்ன உடலில் என் இதயம்
புயலாக வெடித்துச் சீற்றம் கொள்கிறது
அடுப்பிலிருந்து கெட்டிலை ஏடு
பாக்கெட்டிலிருந்து சிகரெட்டை எடு

பட்டுக் கம்பள நூல்களைப் போல்
சுருள் சுருளாகப் புகைவிட்டு நீ
புகையிலை பிடிப்பாய் என்று எனக்குத் தெரியும்
இந்த அடங்க மறுக்கும் குன்றுகளின்
கன்னிமை அழகை
நான் எவ்வாறாகத்தான் நேசித்தேன்

எமது துப்பாக்கிகளினால்
நாம் ஆசீர்வதிக்;கப்பட்டிருந்தோம்
தாயின் கர்ப்பப்பை போல
இந்தக்குன்றுகள் நம்மைப் பாதுகாத்தது
துருக்கியர்களதும்
அராபியர்களதும் கொடு வாள்களிலிருந்து

பார்ஸியர்களும் நம்மீது அழுத்திக் கொண.டிருந்தார்கள்
இது நம் விதி

இந்தக் கோபம் தான் இரண்டு எரிமலைகள் போல்
என் இரு கைகளை
எமது துப்பாக்கியின் மீது அழுந்தச்செய்கிறது

எமது குழந்தைமைக் கைகள் போனது
எனது பட்டுக் கூந்தலும்

பெண்கள் அதிகம் போராடுகிறபோது அவர்கள்
அதிகம் அழகு பெறுகிறார்கள்

நீ இதைச் சொல்லாமல் இருந்திருக்கலாம்
நானும் அறிவேன்
போராட்டத்தினிடையில எனது பேனாவும் சொல்லமுடியாது
ஆயினும் அபிதின் இப்போராட்டத்தின்
ஆழிவில்லாப் படங்களை வரைந்தே ஆகவேண்டும்

வாழ்வு ஒன்று
போராட்டமும் ஒன்று
பாதையும் ஒன்று
தோழர்கள் அனைவரும் ஒன்றுதான்
மரணம் வரையிலும் உன் பாதையை நான் தொடர்வேன்

உனது பெயரை நான்
உரத்து முழங்குவேன்

இரத்தசாட்சி பெரித்தான்--.

53. எனது நகரம்! - அஸாத் தில்ஸார் தமிழில்: யமுனா ராஜேந்திரன்

எனது நகரம் ஆழ்ந்த துயிலில் இருக்கிறது
மெதுவாக நகர்ந்து கொண்டு
முன்னேற்ற வண்டியில் பின்தங்கி
இருந்தாலும் உலகிலேயே புரதான நகரம் இந்நகரம்தான்

நான்கு கடவுள்களுக்கு சமாதிகளும்
நினைவாலயங்களும் இங்கேயிருக்கிறது
ஸினோபோனின் பத்தாயிரம் வீரர்கள்
இந்த நகரத்தைக் கடந்து சென்றிருக்கிறார்கள்
என்றாலும் கூட
தாரியஸ_ம் அலக்ஸான்டரும் சண்டையிட்ட அரங்கம்
இங்கிருக்கிறது என்றாலும் கூட
எனது நகரத்தின் வயது 4000 ஆண்டுகள் என்றாலும் கூட
இன்னும் அது ஒரு குழந்தைதான்
தற்போதுதான் அது நடக்கவும் பேசவும் கற்றுக் கொள்கிறது

பைத்தியக்காரர்களும்
புத்தி பேதலித்தவர்களும் என் நகரத்தில் அதிகம்
ஆயிரக்கணக்கில்
பிச்சைக்காரர்களும் வேலையற்றவர்களும்
புஜபல பராக்கிரமமுள்ள பல இளைஞர்கள்
காலணிகளுக்கு பாலீஷ் போடுபவர்களாக
அல்லது சுமை தூக்கிகளாக இருக்கிறார்கள்

எனது நகரத்தில் பெரும்பாலான மக்கள்
பசியில் வாடுகிறார்கள்
ரொட்டிக்காக
அழுக்குத்தலைப் பராரிகளாக அலைகிறார்கள்
குராஜ் வயல்களில் விளையும கோதுமை உலகெங்கிலும்
புகழ் பெற்றதாக இருந்தாலும் கூட

எமது துயரங்களுக்கு வழிகாட்டி இல்லாது
எனது நகரம் இலக்கற்ற அலைந்து கொண்டிருக்கும்
குடிகாரன் போல் வீழ்ந்துகிடக்கிறது

எனது நகரத்தின் தெருக்கள் குறுகியது
இங்கு சிலைகள் இல்லை
அதனது சதுக்கங்களில் வண்ண வண்ண மலர்கள்
அடர்ந்து கிடந்தபோதிலும்
பாடுவதற்கும் நடனமாடுவதற்கும் இங்கு அரங்குகள் இல்லை

இரவுகள் பாடல்கள் நிறைந்தது
எனது நகரத்தின் இளம்பெண்களும் இளைஞர்களும்
அழகும் ஆரோக்கியமும்; நிறைந்தவர்கள்

எனது நகரத்தின் வரிசையான கோட்டைகளும் கொத்தளங்களும்
ஜொலிக்கும் தன்மையன எனினும்
புயலில் உருட்டி வீசப்பட்ட
காகிதப் பைகளைப் போல அவை தோன்றும்

54. அடையாளமற்ற போராளி - அப்துல்லா பெஸ   தமிழில்: யமுனா ராஜேந்திரன்

அயல்நாட்டுத் தூதுக்குழவொன்று
ஒரு நாட்டுக்குச் செல்லும்போது அடையாளமற்ற வீரனின்
சமாதியில் வைப்பதற்காக
பூங்கொத்தை எடுத்துச் செல்வார்கள்;

நாளை ஒரு வெளிநாட்டுத் தூதுக்குழு
குர்திஸ்தானுக்கு வந்து என்னிடம் கேட்கலாம் :
அடையாளமற்ற வீரனின் சமாதி எங்கே?
அப்போது நான் அவர்களுக்குச் சொல்வேன்
ஐயா-
ந்த தேசத்தின் ஓவ்வொரு ஆற்றின் கரையிலும்
ஓவ்வொரு மசூதியின் முன்திண்ணையிலும்
ஓவ்வொரு தேவாலயக் கதவின் முன்பும்
ஓவ.வொரு குகையிலும்

குன்றுகளின் ஒவ்வொரு கல்லிலும்
தோட்டத்தின் எந்த மரத்தின் மீதும்
பூமியின் ஒவ்வொரு அடி மண்ணீலும்
ஆகாயத்தின் கீழ்
ஒவ்வொரு அடி இடைவெளியிலும்

நீங்கள் பயப்படத் தேவையில்லை
ஐயா----

நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து
கொஞ்சம் குனியுங்கள்

உங்களது பூங்கொத்தை அங்கே வையுங்கள்
போதும்

yamunarn@yahoo.com

(55- 65) கோநா கவிதைகள்

55. ஒரு ஏரி, நிறைய நீர், நிறைய பறவைகள்
எங்கள் ஊரில்
ஒரு ஏரி இருந்தது
நிறைய நீரும்,
பறவைகளும் கூட.

நீரை 'பாட்டில்'களிலும்
ஏரியை 'பிளாட்'களிலும்
அடைத்து வித்துவிட்டார்கள்.

இப்போது
எங்கள் ஊரில்
நிறைய வீடுகளும்
வீடுகளுக்குள் சொந்தமாக
ஆளுக்குக் கொஞ்சம்
'பாட்டில்' நீரும், ஏரியும்.

பறவைகள்தான்
எவ்வளவு சொல்லியும் கேட்காமல்
எங்கோ பறந்து போய்விட்டன
எங்களை நிராகரித்துவிட்டு.

56. ஒரு ஆட்டம்
வியூகம் வகுத்து
நகர்த்துபவர்களின் விழிகளில்
அமைதிப் புறாக்கள்
அலகுகளால் குதறிய குருதி
கருப்பு வெள்ளைக் காய்கள்
கத்திகளை எறிந்து விட்டு
கட்டித் தழுவிக் கொள்கின்றன நகர்ந்து.

57. களத்தில் வெட்டுவதோ
கழுத்தில் வெட்டப்படுவதோ
கதறி அழுவதோ
கர்வச் சிரிப்போ...

உணர்வுகள்
சிறு மின்னூட்டங்கள்,
கடவுளால் கைவிடப் பட்டவர்கள்
கைக்கொள்ளும் உபாயங்கள்
கையாலாகாத்தனத்தை
மறைக்கும் முகமூடிகள்
உங்களை கட்டுப் படுத்தும்
கரங்கள் நுட்பமானவை
உங்கள் அவதானிப்புகளுக்கு
அப்பாற்பட்டவை,
ஆதலால்
ஆடற வரைக்கும்
மூடிட்டு ஆடிட்டுப் போங்க.

காய்களை நகர்த்தி வெட்டுவதில்லை
இப்போது...
நவீன யுத்தம்
காய்களை கவனித்து
நம் பக்கம் மாற்றிக் கொள்வது
ஒத்துவராத, உபயோகமில்லாத
காய்களை மட்டும்
கட்சி மாறிய
காய்களை வைத்தே கொல்வது
கத்திகளை எப்போதும்
குழிபறிப்பதற்கு மட்டும் பயன்படுத்துவது
தவிர்க்க இயலாத சூழலில் மட்டும்
கொல்லப் பயன்படுத்துவது
குறிப்பாக
முதுகில் குத்துவதற்கே
முன்னுரிமை கொடுப்பது
காட்டிக் கொடுப்பது
கூட்டிக் கொடுப்பது...

தப்பான நேரத்துல தப்பான இடத்தில
தவறிப் பொறந்திட்ட தம்பி...
கஷ்டப் பட்டு போராடு,
உயிரக் கொடுத்துப் போராடு...

எவ்வளவு முடியுமோ
அவ்வளவு கம்மியான கேவலத்தோட
செத்துப்போக.

58. குழந்தை மழை

வெளிச்சம் நிரம்பியிருந்தயிரவு
நிலவு கண்ணில் படவில்லை
எழுந்து தேடவுமில்லை.

அருகருகே
அம்மா, குழந்தை.

நீண்ட ஒற்றைக்கொம்புடன்
மூன்று கால் மான்,
தும்பிக்கை உயர்த்தியபடி
வலது காலும்
வாலுமற்ற யானை,
அங்கங்கே விரிசலுற்ற
குதிரைகளற்ற தேர்,
களைந்தெறிந்த
குழந்தை உடைகளாய்,
உடைத்த பொம்மைகளாய்
இன்னுஞ் சில
உருவமற்ற குவியல்கள்.

"விர்ர்"ரென்று
விமானமொன்று
அருகில் கடக்க
விருக்கென்று துள்ளிய குழந்தை
தவழ்ந்து செல்கிறது
தாயிடம்.

குளிர்ந்து கனத்த
காற்றொன்றில் கலைந்து
பாம்பாய், புலியாய்,
கரடியாய், யானையாய்,
உருவங்களற்றதுமாய்,

உடைந்து
உருமாறியது அம்மா.

அரவணைத்துக்காக்க அருகே
அம்மா இல்லாதலால்
அனைத்துமே பயமுறுத்த,
முகங்கருத்துக் குழந்தை
பயந்து அழ,
ஆரம்பித்திருக்கிறது
ஒரு குழந்தை மழை.

59 காமக் கடுங் கானல்
மெல்லிய குறுந்தகடிலிருந்து
வெளிவந்து புரிந்த
தூரதேசத்து
ஆண்கள், பெண்களின்
நீண்ட கலவிகளில்
கலந்திருந்தேன்.
கவுரவ விருந்தினராக.

இரு வெள்ளைப் பெண்களும்
ஒரு கருப்பு இளைஞனும்
உச்சத்தை நெருங்கிய கணத்தில்
சட்டென மறைந்தனர்
மின்சாரவேகத்தில்.

காற்றில் கரைந்திருந்த
கலவிகளின் ஒலிகளுடனும்
கனவுகளில் மிதந்த
கலவிகளின் நினைவுகளுடனும்
நிகழ்ந்து முடிகிறது
தவறவிட்டுவிட்ட ஒரு
தனிமையின் உச்சம்.

60. வீடெனப்படுவது...
அதிகாலை ஊரிலிருந்து
தவிர்க்க முடியாத தகவலொன்று

கைப்பேசி சொல்லப்பட
ஆற அமர யோசித்து
பொருத்தமான பொய்யொன்றை
ஆபீசில் சொல்லிவிட்டு
அவசியம் வருமாறு
அவசரமாய் கிளம்பிவிட்டனர்
அப்பா, அம்மா, தங்கை.

எனக்கும் சேர்த்து எடுத்துச் சென்ற
ஆறேழு நாட்களுக்குமான
ஆடைகள், இதர பொருட்களுடன்
ஒட்டிக்கொண்டு
வீடும் சென்றுவிட
என்னுடன் மிச்சமிருப்பவை
சில சுவர்கள், பொருட்கள்,
சில ஜன்னல்கள், கதவுகள்,
ப்ரிஜ்ஜில் மிஞ்சிய நேற்றைய மாவு,
இவற்றுடன்
ஹாலில் அமர்ந்து
தம் அடிக்க கொஞ்சம் சுதந்திரமும்,
நிறைய தனிமையும்.

61. பெண் சிநேகம்
முன்னிருக்கையில் பெண்
அழகாயிருந்தாள்
அம்மாவுடன்
அமர்ந்திருந்தவள்
எதேச்சையாய்
என்னைப்பார்க்க
முழிபிதுக்கி
மூக்குவிடைத்து
நாக்குதுருத்தி
கைவிரல்களை
கொம்புகளாக்கி
அழகு காண்பிக்க
உடனே சிரித்தாள்.

சிநேகமாகிவிட்ட
சந்தோசத்தில்
இயல்பாகி
இலேசாய் சிரிக்க
உடனே அழுதவள்
திரும்பிக்கொண்டாள்.

அவள் அம்மாவிடம்
என்னை வைத்து
காமெடி கீமெடி
பண்ணிட்டாளோயென்று
இன்றுவரை
உறுதியாய்த் தெரியவில்லை.

62. வன்முறைக்கான வினாவிடைகள்
கேள்விக்குறியாய் முதுகு வளைய
பள்ளிக்குழந்தைகள் சுமந்து செல்லும்
புத்தகப் பையினுள்
தேடினால் கிடைக்கக் கூடும்
உங்களை
ஆச்சர்யக் குறிகளில் ஆழ்த்தும்
வளர்ந்தவர்கள் வளர்த்துவிட்ட
வன்முறைக்கான வினாவிடைகள்.

63. வருங்காலம்
படர்ந்திருந்த கொடியில்
பூக்கத் துவங்கி விட்டன
பூசணிப் பூக்கள்.
விரைந்து வந்துகொண்டிருக்கிறது
வேலி மரங்களில்
பூசணிகள் காய்க்கும் காலம்.

64. சிறுமியிடம் மாட்டிக்கொண்ட வறுமையும், மனிதாபிமானமும்
தட்டைத் தட்டியெழுப்பிய
தாயின் தாளத்துக்கு
இடுப்பசைத்து மெலிதாய் ஆடியபடி
கழுத்தை நெரித்துத் தொங்கிய

கம்பி வளையத்தை
தோள்களைக் ஒடுக்கி,
நெஞ்சைக் குறுக்கி,
வயிற்றைச் சுருக்கி,
கால்வழியேயெடுத்து
கக்கத்தில் வைத்துக்கொண்டு
சில்லறைத் தட்டை
தாயிடம் கொடுத்துவிட்டு
தவழும் தம்பியுடன்
சிரித்து விளையாடுகிறாள்
வித்தை காட்டிய சிறுமி.
கழுத்தை நெரித்து விடவேண்டுமென
கங்கணங் கட்டி வந்த வறுமையும்,
உதவி விட்டதாய்ச் சத்தமிடும்
சில்லறைகளின் மனிதாபிமானமும்
மாட்டிக்கொண்டு முழிக்கின்றன செய்வதறியாமல்,
கக்கத்தில் வைத்திருந்த கம்பி வளையமாய்.

65. புரிதல்
உழைத்த களைப்போ
உறவுகளின் மீதான சலிப்போ
தூங்கித் தோள்சரியும்
சகபயணி
அவராய் நானும்
நானாய் அவரும்
இருந்திருக்கவோ
இருக்கவோ கூடும்.

konamonaa@gmail.com

66. சபிக்கப்பட்ட உலகு - -துவாரகன்-

மீளவும் பூச்சிகளும் பறவைகளும்
வாழும் உலகு எனக்காகச்
சபிக்கப்பட்டிருக்கிறது

எப்போதாவது ஒருமுறை வரும் வாகனத்தில்
ஒரு பயணத்திற்காகக் காத்திருத்தல்
வழமையாயிற்று

எத்தனை முறைதான் இப்படிச் சறுக்கி விழுவது?

அதிகமாக எல்லா அதிகார வர்க்கத்திற்கும்
மூளைப் பிசகு ஏற்பட்டிருக்க வேண்டும்?

சீறிவரும் வாகனத்தில் இருந்து
கண்ணாடிக் கதவு இறக்கி
சுட்டுவிரல் காட்டவும்
லாபத்தில் பங்குபோடவும்
நேரம் குறித்து வருவார்கள்.
கூடவே முதுகு சொறிய
கொஞ்சம் ஒட்டியிருக்கும்.

பூச்சிகளும் பறவைகளும் மிருகங்களுமே
வாழக்கூடிய வனவாசகத்தில்
பட்டரும் ஏசியும் நெற்வேர்க்கும் பயன்படுத்தலாம்
என ஆலோசனை கூறுகிறார்கள் மூளைகெட்டவர்கள்

மூன்று மணித்தியாலமாக
யாரோ ஒரு நல்லவனின் வருகைக்காக
பாசிபிடித்த மதகு ஒன்றில் குந்தியிருக்கிறேன்

வீதியை வெறிப்பதும்
குரங்குகளின் ஊஞ்சலை ரசிப்பதும்
பறவைகளின் கீச்சிடலும் பழக்கமாயிற்று

மழைபெய்து ஈரமாக்கிய கிரவல் மண்ணில்

மண்புழுக்கள் நெளிவதையும்
வாரடித்து ஓடிக்கொண்டிருக்கும் நீரில்
தத்தளித்துக் கொண்டிருக்கும் எறும்புகளையும்
இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறேன்

இந்த உலகில் வாழச் சபிக்கப்பட்ட
என்னைப் பார்த்து வாலாட்டிக் கொண்டு
ஒரு கண்டன்கறுவல் வீதியைக் குறுக்கறுக்கிறது

*கண்டன்கறுவல் - ஒரு வகைப் பாம்பு

kuneswaran@gmail.com

67. இரவின் நிழல் - சோ.சுப்புராஜ் -

அனேக நேரங்களில் - நீயென்
தோளில் முகம் புதைத்து
அழுவதில்
ஆறுதல் அடைந்திருக்கிறாய்;

சிறுகுழந்தையாய்ச் சுருண்டு - என்
மடியில் படுத்துறங்குவதில்
மகிழ்வு கண்டிருக்கிறாய்;

வெறுமை தகிக்கும் உன்
விடுதிச் சூழலிலிருந்து விடுபட்டு
எங்களின் வீட்டிற்கு
ஓடி வரும் போதெல்லாம்
துப்பட்டாவையும் துயரங்களையும்
களைந்து வீசி விட்டு
விடுதலை பெற்ற சிறுபறவையாய்
சந்தோஷச் சிறகை விரித்திருக்கிறாய்.....

இப்போதெல்லாம் நீ
என் அருகில் அமரவே
அச்சப்படுகிறாய்;

தனித்திருக்கும் தருணங்களைத்
தவிர்க்கவே விரும்புகிறாய்;

கண் பார்த்து நான் பேசினாலும்
துப்பட்டாவை அடிக்கடி
இழுத்து விட்டு இம்சிக்கிறாய்;

இருவருக்கும் இடையில்
இப்போது விழுந்து கிடக்கிறது;
எனக்குள்ளிருந்த
ஆணெனும் மிருகம் விழித்து
உலாவத் தொடங்கிய
கனத்த இரவொன்றின் நிழல்

கடக்கவே முடியாதபடி.....

email: engrsubburaj@yahoo.co.in

68. அத்தனைக்கு மத்தியிலும் "I am fine" - மன்னார் அமுதன்

நட்சத்திரம் மின்னாத என் இல்லற இரவுகள் எப்போதும் விடிந்தே கிடக்கின்றன.

நட்சத்திரம் மின்னாத
என் இல்லற இரவுகள்
எப்போதும் விடிந்தே கிடக்கின்றன.

விலைக்குப் பெற்ற
சுதந்திரம் போலவே
கடமையாய்க் கழிகிறது
காதல்

ஆர்வமாய் எதையோ
நாற்பத்திரண்டிலும் தேடுமவர்
இருட்டில் என்னைத் தொலைத்துக்
கொண்டிருக்கிறார்

எத்தனை கதறியும்
எதிரொலிக்காத வயிறு
ஆண்டுகள் இரண்டு
காத்திரு என்கிறது

ஏலவே கடந்துவிட்ட
முப்பத்தியெட்டில்
திக்கித் திக்கி
தள்ளிப்போகிறது மாதம்

அத்தனைக்கு மத்தியிலும்
அவல் கேட்கும்
வெறும் வாய்களுக்கெல்லாம்
சொல்லிக் கொண்டிருக்கிறேன்
"I am fine"

amujo1984@gmail.com
பதிவுகள், செப்டம்பர் 2010 இதழ் 129

69. இதயத்தின் மொழியில் உன்னிடம்! - காளி நேசன் -

உன்னை பார்த்துக்கொன்டிருந்த நொடிகள் ஒவ்வொன்றும் உன்னை பார்த்துக்கொன்டிருந்த நொடிகள் ஒவ்வொன்றும்
ஒரு பிரளயம் என் காலடியில்!
காதல் சொல்லியபின் கடந்த ஆண்டுகள்
நொடியில் நழுவி சென்றதாக எண்ணம்!
எனக்கு இதயத்தின் மொழியில்தான் பேச தெரியும்!
எனக்கு புரிந்ததெல்லாம், இதயத்தின் மொழி மட்டுமே!
என் சொல், குறியீடு, சைகை எல்லாம் என்
ஆன்மாவின் ஆழத்தில் உதிப்பவை!
நான் எந்த ஒரு கூட்டத்தையும் எளிதில் சாராதவன்!
அவை சார்ந்த சொல், குறியீடு, சைகைகள் எதுவும் புரியா!
காதலுடன் சேர்ந்து வரும் சாரல் மழை என்றனுபவத்தை தவிர
மற்ற விஞ்ஞானங்கள் எதிலும் நம்பிக்கையில்லை!
நான் பார்ப்பதெல்லாம் இவைகள்தான்
காதலின் துடிப்பு, ஆன்மாவின் அழகு, இதயத்தின் உண்மை!
இவைகளில் எந்தவிதத்திலும் நீ தோற்றவள் அல்ல!
சிவப்பு வண்ண உடையில் என் அருகில் நீ
செம்பருத்தி மலரின் இதழ்களால் நெய்யபட்ட சந்தன யாழ்!
ஆன்மாவின் ஆழத்தை உணர்த்தும் உன் அழகிய விரல்கள
முல்லை மலர்கள் பதித்த செண்பக பூங்குலழ்கள்!
இந்த கரங்களுக்கு என்னால் என்ன பெரிதாக தர முடியும்?
கொடுக்கவிருந்ததையும் கடலிடம் அளித்துவிட்டேன்!
உனக்கு நான் எதையும் கொடுக்கவில்லை
சில கவிதைகள் தவிர! ஆனாம் எல்லாம் இழந்து நிற்கிறேன்!
என்னை சுற்றி சுற்றீ வந்து நீ பேசாமல் செல்வது .....
நான் என்ன சொல்வது?......
இனி இழப்பதற்க்கு ஒன்றுமில்லை என்னிடதில்!

kali.priyan@gmail.com
பதிவுகள், டிசம்பர் 2010, இதழ் 132

70. யுத்தத்தில் தொலைந்து போன எனது மாணவன் -துவாரகன்-

யுத்தத்தில் தொலைந்து போன எனது மாணவன்

ஒருநாள் நீ வந்தாய்
புதியதொரு பிறப்புச் சான்றிதழ் படிவத்தோடு
'இதை நிரப்ப வேணும் சேர்' என்றாய்
அப்போது நான் அறிந்தது உன்னை
தர்மேகன் என்று.

பிறப்புச் சான்றிதழில்
உன் பெயர் தர்மவேகன் என்றாய்
இருவரும் சிரித்துக் கொண்டோம்
பின்னர் சங்கடத்துடன் கூறினாய்
'என்ன சேர் செய்யிறது?
மாறிப் பதிஞ்சிட்டாங்களாம்!
நீங்கள் இப்படியே எழுதுங்கோ'
அன்றிலிருந்து
எம் குரு சிஷ்ய உறவு தொடர்ந்தது

வசீகரிக்கும் கறுப்பு நிறத்தில் நீ
எந்நேரமும் துருதுருத்துக் கொண்டிருக்கும்
உன் விழிகள்.
பல்வரிசை காட்டி நீ சிரிக்கும் அழகு
கண்ணில் நின்று ஆடுதடா

கற்றலில் விளையாட்டில்
வழிகாட்டலில், வழிநடத்தலில்
கைகொடுப்பதில்
எங்கும் உன் செம்மை கண்டேன்

சேமமடு ஆசிரியர் விடுதியில்
எம்மோடிருந்து படித்து
உறங்கிய ஒரு நாள்
உனது இடது உள்ளங்கால் தோலை
எலி அரித்து விட்டுச் போனது
காலை எழுந்தவுடன்

பாயில் இருந்தபடி
உன் காலைக் காட்டியபோது
தேங்காய் அரித்த அடையாளம்…
'நீ வெள்ளையாய் வருவாய்' என்றோம்
மறுநாள் 'அக்காவின் மோதிரம் சூடுகாட்டிச் சுட்டேன்' என்றாய்

உனக்குக் கிடைக்கும் சுவையான சாப்பாடு
எங்களின் பங்குபோடலுக்குக் கொண்டு வருவாய்
மாலை முழுவதும்
நுங்குக்குலை, பழங்கள் எமக்காகும்
வயல் வெளியும் மஞ்சள் வெயிலும்
குளக்கரையும் உலாவ வைப்பாய்
பல தடவைகளில் நீதான் வழிகாட்டி
வர்ணனையாளன்… எல்லாமே

குளத்தில் குளிக்கும்போது
சின்னமீன்கள்
உடம்பில் கடிக்கும் இதம்காண வைத்துவிட்டு
நீ குத்துக் கரணம் அடிப்பாய்
உன்னோடு சேர்ந்து நாமும் சின்னவர்களாவோம்.

எந்த வேலையும் உனக்கு இலகுவாகும்
ஒரு விளையாட்டுப் போட்டி
'சேர் வித்தியாசமாக ஏதும் செய்வோம்'
இல்லத்துக்கு 'ஈபிள் ரவர்' வடிவம் சொன்னேன்
கண்டவர் வாய் பிளக்க காரியம் செய்தாய்

சரஸ்வதி பூஜை, பரிசளிப்பு விழா
மாணவர் மன்றம், நாடக விழா
எல்லாம் முன்வரிசை நாயகன் நீ
வீட்டாரை உறவென்று ஆக்கினாய்
பேச்சாலும் சிரிப்பாலும் நட்பினைப் பெருக்கினாய்

பள்ளிப் பருவத்தை முழுதாய் அனுபவித்த
முதல் மாணவன் நீயடா

மூன்றரை வருடத்தின் பின்

உன் அம்மாவின் கையால்
மீண்டும் ஒரு தடவை
சாப்பிடும் அன்பு கிடைத்தபோது
என்னருகில் நீ இருந்து
'சேர் வடிவாச் சாப்பிடுங்கோ'
அந்தச் செல்ல அதட்டல் காதில் கேட்டதடா!

இன்று
எல்லாம் இழந்து வந்த
உன் உறவுகளின் முன்னிருந்து
கதை பயிலத் தொடங்கினேன்.
உன் அத்தானும் அம்மையாவும்
நீயும் இல்லாத
வெறிச்சோடிய வீட்டில்
உன் சிரிப்பினைச் சுமந்து கொண்டு
அக்காவின் பிள்ளைகள்
புன்னகைக்கக் கண்டேன்.

இப்போ உன் சிரித்த முகம் மட்டும்...
உன் அம்மாவின் காய்ந்த விழிநீரின் பின்னால்
மறைந்திருக்கக் கண்டேனடா.
கொடுப்பில் வெற்றிலை வைத்துக் கொண்டு
நடுங்கும் குரலில் கதைக்க
உன் அப்பாவிடம் கண்டேனடா.
ஆவலாய்க் கதைகேட்கும்
உன் அக்காவின் கருவிழிகளுக்குப் பின்னால்
மறைந்திருக்கக் கண்டேனடா.
டிரக்டர் சீற்றில் இருந்து
அதட்டிக் கதைசொல்லும்
உன் அண்ணன்மாரிடம் கண்டேனடா
தயங்கித் தயங்கி வேலை செய்யும்
உன் தம்பியின் உருவத்தில் கண்டேனடா

ஆனால்
உன் செல்லக்குட்டி மருமகளிடத்தில் மட்டும்
ஆசை அங்கிள் வருவார் என்று
உன் அன்புக்கு ஏங்கி நிற்கும்

சிரித்த முகத்தை இன்றும் கண்டு கொண்டேன்.

என் அன்பு மாணவனே
நீ தர்ம வேகன் என்பதாலோ
வேகமாகச் சென்றுவிட்டாய்?

11.03.2010

(வவுனியா சேமமடு சண்முகானந்தா வித்தியாலயத்தில் கல்வி கற்ற எனது மாணவன் ஐ. தர்மேகன் நினைவாக)

kuneswaran@gmail.com

71 எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை - -நடராஜா முரளிதரன் -

எந்த நாடும் எனக்குச் சொந்தமில்லை
அந்த அவாவினை
என் நினைவின் இடுக்கிலிருந்து
பிடுங்கியெறிவதையே
என் எதிரிகளும்
என்னவர்களும்
இடைவிடாது புரியும்
தொழிலாகக் கொண்டுள்ளார்கள்

எனது கனவுகளின் போதே
சாத்தியமாகியுள்ள
அந்த நினைவுப்படலத்தை
எனது அன்புக்குரியவளே
நீயும் சிதைத்து விடாதே

மூடுண்ட பனியில்
அமிழ்ந்து போய்
சுவாசம் இழந்துபோய்
நான் தவிப்பதுவாய்
நேற்றும் ஓர் கனாக் கண்டேன்

கோடை தெறித்த வெய்யிலில்
கருகும் உயிரினத்துக்கான
உஷ்ணவெளியில்
பிறந்த நான்
கனவுகளில்
உயிர் பிழைப்பதாய்
நீ நம்புவாய்
ஆனால்

எனது மண்ணிலிருந்து
நான் இடம்பெயர்க்கப்பட்டபோது
எனது மண்ணின் சில துணிக்கைகளும்
என்னோடு ஒட்டிக்கொண்டு
விலக மறுத்து

சகவாசம் புரிவதை
யாருக்கு நான் உணர்த்துவேன்

nmuralitharan@hotmail.com

பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

72. .சூறாவளியின் பாடல்! - - எம்.ரிஷான் ஷெரீப் -

பலம் பொருந்திய
பாடலொன்றைச் சுமந்த காற்று
அங்குமிங்குமாக அலைகிறது

இறக்கி வைக்கச் சாத்தியமான
எதையும் காணவியலாமல்
மலைகளின் முதுகுகளிலும்
மேகங்களினிடையிலும்
வனங்களின் கூரைகளிலும்
நின்று நின்று தேடுகிறது

சமுத்திரவெளிகளிலும்
சந்தைத் தெருக்களிலும்
சுற்றித்திரிய நேரிடும்போது
இரைச்சல்கள் எதுவும் தாக்கிடாமல்
பொத்திக்கொள்கிறது பாடலை

பறவைகள் தாண்டிப் பறக்கையிலும்
காத்துக்கொள்ளப்படும்
இசை செறிந்த பாடல்
சலித்துக் கொள்கிறது
ஓய்வின்றிய அலைச்சலின்
எல்லை எதுவென்றறியாது

தனிமைப்பட்டதை
இறுதியிலுணர்ந்தது
தெளிந்த நீர் சலசலக்கும்
ஓரெழில் ஆற்றங்கரை
மரமொன்றின் துளைகளுக்குள்ளிருந்து
வெளிக்கசிந்து பிறந்த நாதம்

இருளுக்குள் விசித்தழும்
பாடலின் கண்கள் துடைக்கும் காற்று
அதைச் சில கணங்கள்
அந்தரத்தில் நின்று

பத்திரமாகப் பார்த்திருக்கச் சொல்லி
ஆவேசத்தோடு கீழிறங்கும்

பின்னர் பாடலை அழ வைத்த
காரணம் வினவி
தான் காணும்
வெளி, தெரு, சமுத்திரம், நதி, வனமென
அத்தனையிலும் தன் சினத்தினைக் காட்டி
அடித்துச் சாய்க்கும்

இயலாமையோடு எல்லாம்
பார்த்திருக்கும் பாடல்
இறுதியில் கீழிறங்கி
எஞ்சிய உயிர்களின்
உதடுகளில் ஒப்பாரியாகி
கோபக் காற்றெதிரில் செத்துப்போகும்

காலம்
இன்னுமோர் பாடலை
காற்றுக்குக் கொடுக்கக் கூடும்

mrishanshareef@gmail.com
பதிவுகள், ஆகஸ்ட் 2010 இதழ் 128

73. நீ இல்லாத அறை புழுக்கமாயிருக்கிறது - நட்சத்ரவாசி

ஒரு பழைய நினைவை இழுத்து வந்தது
மெல்லிய காற்று வெறும் பொழுதொன்றில் இதமாய்
அதனொரு சூழலில் அறை பற்றிய
சித்திரம் காட்சிப்படுத்தப்பட்டது
அறை வாசலின் திரைச்சீலை
காற்றில் படபடக்கிறது
அதன் சுழல் திசைவழியில்
அதனைப் பற்றிப் பிடித்தவாறு
நின்றிருந்த அவள் சிரிப்பொலி தோய்ந்த முகம்
மெல்ல மறைந்து ஒலிநாதமாகிறது
படுக்கையில் கிடந்தவாறு ஏதேதோ
பேசிய பேச்சுக்கள் வரிகளாக மிதக்கின்றன
மெல்ல இருமை கவிந்து வெளிச்சம்
மேலெழும்புகையில் ஓடிச்சென்றொளியும்
அவளின் கரம்பற்றி அறைக் கதவோடு
சாய்த்து நிறுத்தி கொடுத்த இதழ் முத்தம்
நினைவுக்கு வெளியிலும் வெடிக்க
உதட்டை துடைத்து நாணமுடிகிறது
மெல்ல உயரும் அவள்
முகத்தில் பயம் கலந்துவிட
கரம் விட்டு ஓட எத்தனித்து
போக முடியாமல் அதிர்ந்தெழுந்து
அக்னியில் சமைந்தோம்
அறை இப்போது புழுக்கமாயிருக்கிறது.

mujeebu2000@yahoo.co.in
பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

74. தீக்குஞ்சுகள் -நட்சத்ரவாசி

எரியும் தீயினை பாருங்கள்
ஒரு சிறிய முனையின்
சொல்லொன்று பற்றியதோ
அக்கினியை சமைக்க
எந்தவொரு வல்லமை வந்ததோ
அதன் எரிதலிலும் படர்தலிலும்
வெவ்வேறு நிறமிருக்க
என்ன காரணமோ
எரிந்து கொண்டிருக்கும் ஒரு பொறி
உயர்ந்து மேலெழுந்து
பறந்து உயர்தலிலும்
என்ன ஒரு வேகம்
பொடிந்து விழும்
சிறு தீக்குஞ்சுகள்
கண்முன்னே மரிக்க
பதறாதோ மனம்
அவை படபடத்து படபடத்து
குஞ்சுகளை பொரிக்கின்றன
எந்த ஒரு இயலாமையும்
காட்டிக்கொள்ளாமலே
சிறு சொல்லெடுத்து நானும்
அக்கினி சமைக்க
வென்று விட்டதோ உலகை
அதனொரு தழல்.

mujeebu2000@yahoo.co.in
பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

75. யாரோ போட்டு முடித்து தானமாகக் கிடைத்த இரவுச் சட்டை - துவாரகன் -

ஒரு நாள்
என் வீடு இருந்தது.
வயல்வெளிக்கு நடுவே
ஆலமர விருட்சம் போல்

அரைக்காற்சட்டையோடு
அண்ணா
டிரக்டர் எடுத்து வயல் உழச்செல்வான்
அப்பா
விதைநெல் விசிற சின்னமாமாவைக் கூட்டிப் போவார்
மாலை பட்டி திரும்பும் மாடுகளை அடைக்கவும்
குளத்தில் வரால் மீன் பிடிக்கவும்
சின்னத்தம்பி என்னுடன் வருவான்.

தங்கையும் நானும் கதை பயில
தேக்கமரமும் மலைவேம்பும்
எம்மை ஊஞ்சலில் தாங்கிய நாட்கள்.

மாலையானதும்
மாடுகள் அசைபோடுவது போல்
உறவுகள் சுற்றியிருந்து
அன்பை அசைபோடுவோம்.

அம்மாவும் பெரியக்காவும்
சுவையாகச் செய்த சாப்பாடு.
செய்திக்குப் பின்
அப்பா என்னிடம் தரும் றேடியாவில்
வழிந்து வரும் பாட்டு.
காதில் கேட்கும் எருமைகளின் மேய்ச்சல்த்தூரம்
எல்லாவற்றோடும் நானும் தூங்கிப் போவேன்.

இப்போ
இரண்டு காவலரனுக்கு நடுவில்
மழை வெள்ளம் தரைதட்ட
தொண்டு நிறுவனம் தந்த

படங்கு காற்றில் அடிக்க
எங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட புது நிலத்தில்
அம்மாவின் காய்ந்த விழிகளோடு
நானும் காத்திருக்கிறேன்.

யாரோ போட்டு முடித்து
முகாமொன்றில்
தானமாகக் கிடைத்த
ஒரு இரவுச் சட்டை
என்னை மூடிக்கிடக்கிறது.

kuneswaran@gmail.com
பதிவுகள், பெப்ருவரி 2010 இதழ் 122

76. வெறுமொரு சலனம் - நட்சத்திரவாசி

எனது ஆண்மையின் சூரியன்
உதிக்க துவங்கியது வழக்கமற்ற பொழுதில்
காலம் கலைத்து போட்ட நினைவுகளில்
அதன் வேர்கள் சொற்களாகின்றன
பட்டம் பூச்சியின் சிறகு அதிர்வது போல
அதன் விரைப்பு தொடங்குகிறது
நீ இல்லாத கணங்களை நினைத்தப்படி
நிறைவேறாத காமத்தை சுமந்தபடி
நீ விட்டு சென்ற வலியின் துயரம்
என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கிறது
மெல்ல உயர்ந்து திரண்ட மேகமாகி
கனிய துவங்கி கொள்ள
காத்திருக்கிறது என் காலம் அதன் நேர்கோட்டில்
பிடித்து செல்லப்படாத கன்றின் குதித்தல்
எதைப்பற்றியதாகவும் இல்லை எனும்படி
நீ எப்போது என்னுடன் இருப்பாய்
என்பது தெரியாதாகையால்
நான் சுமக்கும் உனது கனவுகள்
எளிதில் இறக்கிவிட முடியாததாய் இருக்கிறது.
பாழ்வெளியில் வீசும் காற்றின் நினைவுகளில்
உனது முகங்காண துடிக்கும் என் ஆவலில்
வெப்பகிரணமான ஆயிரம் வர்ணங்கள்
என் துயரினும் பெரிதான இப்படியான
பொழுதுகளை கட்டப்பது குறித்து
இப்போதே சொல்லிடு
இல்லையென்றால் எனக்கு நானே தண்டனை
அளித்துக் கொண்டு குருதியில் நனையும்
காமத்தை காலால் எட்டி மிதித்து
எறிய வேண்டிவரும்
வலி முற்றி போகுமுன்னரே
சிறு வண்டி பூட்டி தயராக வைத்திரு
வெப்பம் மெல்ல இறங்கியதும்
இரத்தமணம் கேட்டு வரும் மிருகங்களை
காணாதிருந்திட வேண்டும்
அறுந்து கிடக்கும் என் குறிவளர்ந்து

பெரிதாவதற்க்குள் நான் போய்விடவேண்டும்
பரவும் குருதியில் சூரிய அஸ்தமானம்
வெறுமொரு சலனம் மாத்திரமே.

mujeebu2000@yahoo.co.in
பதிவுகள், பெப்ருவரி 2010 இதழ் 122

77. சருகல்ல இவனென்று சாற்று - நட்சத்திரவாசி

"தேமாங்காய்" "பூமாங்காய்" ஒரு மண்ணும் விளங்காமல்
தெம்மாங்காய் பாடுகிறேன் பாட்டு-ஆமையா.!
நான்பாடும் பாட்டை நானறியேன் பெருங்கவியே
கூனுண்டோ ஆயந்துநீர் கூறும்.

கிறுக்கும் கவியெல்லாம் கீழென்று வளர்கவியை
நறுக்கி பின்னவரே நாறுகின்றார்-திருக்கவியே
நொறுக்கி என்நெஞ்சில் நோக்காடு தந்தோர்முன்
சருகல்ல இவனென்று சாற்று.

அழகுத்தமிழ் கவியின் ஆற்றலினை உணராதோர்'
மிளகாய் போல்மரபை நினைக்கின்றார்'-விலகாமல்
பழகும் தமிழ்மொழியில் மரபுத்தாய் மாண்புகளை
உலகுக்கு சொல்வீர் உணர்ந்து.

78. என்னவள் ஒரு தேவதை - 1 ராம்ப்ரசாத் (சென்னை) -

பால்கனி சுவற்றில்
வெட்சி மலர் போல்
உன் விரல்களை
பூக்க விட்டு நிற்கிறாய்...
உன்னருகே வந்து
உன் இதழ் பிரியும்
அத்தனை வார்த்தைகளையும்
என் செவிகளில்
ஒன்று சேர்த்து நிற்கிறேன்...

மலர் தாவும் வண்டாய்
என் விரல்கள் சுவற்றில்
பூத்த உன் விரல்களில்
வந்தமர முயல,
அதை முன்பே எதிர்பார்த்தவளாய்
கூட்டுக்குள் அடைந்த நத்தைபோல்
உன் விரல்களை
இழுத்துக்கொண்டு
எதிர்திசையில் நிலாமுகம் திருப்பி
இதழோரம் மெல்லிய
புன்னகையை தவழ விடுகிறாய்...

நீ தவழ விட்ட
பொன்னகையில்
மறைந்து நின்ற
ஊடல் முத்துக்களை ரசித்தவாறே
என் இதழ் தவறிச்
சிந்திய நமுட்டுச்சிரிப்பை
சேகரித்துக்கொண்டிருந்தேன்
நினைவடுக்குகளில்...

பதிவுகள், 84. டிசம்பர் 2009 இதழ் 120

79. பாவலர் பாரதியார் நினைவேந்தி...! - தமிழநம்பி -

பாரதிக்குத் தனிச்சிறப்பு பழந்தமிழச் சித்தர்
பாப்போல எளிதாகப் பாடிஎளி யோரும்
தேரஉணர்ந் தெழுச்சிகொளத் தேசப்பற் றூட்டித்
தீக்கனலாய்ப் பரப்பியமை தெரியாதார் இல்லை!
வீரவர லாற்றுடனே வெவ்வேறு செய்தி
விளக்கியநல் எழுத்தாளர்! வீறிழந்து மக்கள்
சீரழிந்தே அடிமையுற்ற சிறுமைநிலை போக்கச்
சீறிஎழச் செய்தஇத ழாசிரியர் இவரே!

தொன்மையுடன் புதுப்புதுமை தோய்ந்தகருத் தெல்லாம்
துளித்தயக்கு மில்லாது துணிவுடனே சொன்னார்!
முன்மையுறத் தாய்மொழியில் முறையாகக் கற்பீர்;
முந்திடும்ஆங் கிலவழியோ முழுபேடிக் கல்வி!
வன்மையுடன் அதைத்தவிர்ப்போம்; வண்டமிழின் வழியே
வழங்கிடுவோம் கல்வியென வழிவகையும் சொன்னார்!
மென்மையொடும் அன்போடும் மிகப்பரிந்து சொன்னார்
மேன்மையுறத் தாய்மொழியே மிக்கதுணை என்றே!

ஒருபக்கப் பாரதியே உருவாக்கிக் காட்டும்
உதவாத போக்கிங்கே உள்ளதிது நன்றோ!
ஒருவிடுக அயற்சொல்லை ஒல்லும்வா யெல்லாம்
ஓங்குகலை சேர்த்துதமிழ் உயர்த்திடுக என்றார்!
தெருளுறவே அவருரைத்த தேர்ந்தகருத் திதனைத்
தெரிந்திருந்தும் பிறசொல்லைத் தீந்தமிழில் கலக்கும்
அருவருப்பை மாற்றிடுவோம் அறிவியலும் கலையும்
அருந்தமிழில் வளர்த்திடுவோம்! அன்புணர்வில் வாழ்வோம்!

[11-9-2009 - பாரதியின் நினைவு நாள்.

thamizhanambi44@gmail.com

பதிவுகள், அக்டோபர் 2009 இதழ் 118

80. மனிதம் அற்ற மானுடம் - ப.மதியழகன் -

வானமகள் மேகமெனும் மெல்லிய ஆடையை
உடுத்தி உடுத்திக் களைகிறாள்

கதிரவன் தன் கதிர்களால் உஷ்ணம் கூட்ட
அவனுக்கு தங்களுடைய இன்னொரு கன்னத்தையும்
காட்டியபடி நின்றன மரங்கள்

கடைவிரிக்கப்பட்ட காலத்திலிருந்தே
காமம், கோபம், பொறாமை குணங்களெல்லாம்
ஏகமாய் விலைபோக
கருணையும், தயையும் கேட்பாரின்றிக்
கிடந்தது, யுக முடிவை எதிர்பார்த்து

அன்றைய விடியலில்
புதியதாக ஒன்றுமில்லை மானுடத்தை வசீகரிக்க
ஆனாலும் பிரபஞ்சததின் முதல் நாளைப் போல
அன்றைய விடியலைக் கொண்டாடின பறவைகள்

நடைபாதையிலுள்ள சிறுசெடியில் பூ ஒன்று
அழகாக மலர்ந்திருந்தது
தான் இன்னும் சிறிது நேரத்தில்
ஜனநடமாட்டம் மிகுந்திடும் போது
செருப்புக் கால்களால்
மிதிபட்டழிவோம் என்பதை
வெகுவாக அலட்சியப்படுத்தியது
அதன் ஆனந்தமான இருப்பு

இரவினில் தான் கரை ஒதுக்கிய கிளிஞ்சல்களை
விடியலில் வந்து பொருக்கும் அரும்புகளைக் காண
குதூகலத்துடன் காத்திருந்தது கடல்

மானிடனோ
தன்னலத்தால் மதிமயங்கி
தான் உயிர் வாழ்வதற்கு
மூலகாரணமாகவுள்ள

ஐம்பூதங்களையும் அலட்சியப்படுத்தி
அகங்காரமாகச் சிரிக்கின்றான்
அதன் எதிரொலி திக்கெட்டும் கேட்கின்றது

ஆழ்குழாய் கிணறு மூலம் பூமித்தாயின்
உதிரம் குடித்து உதிரம் குடித்து
வளர்ந்தவர்கள் தானே நாம் ஒவ்வொருவரும்
மனிதம் அகன்ற பின்பு
இம்மண்ணில் மானுடம் நிலைக்குமா?

81. ஞானக்குயில் - ப.மதியழகன் -

ஆண்குயில்:
‘தனிமையில தவிக்கின்றேன்
உனைச் சேச்ந்த பிறகு
உயிரை துச்சமென மதித்து
தூக்கியெறிந்து
விண்ணில்புக நினைக்கின்றேன்’

பெண்குயில்:
'வாழ்வதன் பொருளை
முழுதும் உணர்ந்தால்
மனிதரும் அற்பசுகம் தேடுவரோ
தான் தேடித் தேடி
காண இயலாமல்
தேக்கமுற்று இறப்பரோ!
கோடியில் எவனோ ஒருவன்
கண்டடைந்துவிட்டால் கூட
இவ்வுலகம் இங்கு இருக்குமோ
இதனை நன்றாய் உணர்வாய்
எந்தன் கருங்குயிலே
முடிவில்லா இன்பம்
எனைப் புணர்ந்தால்
உனக்கு கிடைக்குமென்றால்
அப்பேரின்பம் பெற்ற
நம் முன்னோர்கள் மடியாமல்
இக்கானகத்தில் நிலைத்தனரோ
சிற்றின்ப ஆசையை
ஒருநொடி அடக்கினால் கூட
அச்சங்கல்பத்தால்
சொர்க்கத்தின் வாசல் கதவு
திறக்குமன்றோ
இச்சையினால்
இம்மாயவுலகத்தில்
எத்தனைப் பிறவிகள்
எடுத்து வந்தாய் என்பதை
உணர்வாய் எந்தன்

கருங்குயிலே! ’

ஆண்குயில்:
‘காம உணர்ச்சித்தீயினை
ஞானத்தீயாய் மாற்றிவைத்தாய்
கூடு, இணை, குஞ்சுகள் வேண்டாம்
இருக்கின்ற பொழுதெல்லாம்
இறைவன் இட்டபணி செய்திடுவேன்
யாதுமாகி நின்றிருக்கும்
பரம்பொருளை பாடல்பாடித் தொழுதிடுவேன்
நன்றியுனக்கு
கோடான கோடி நன்றியுனக்கு
போய் வருகிறேன்
பறந்து திரிய
இக்கானகத்தைத் தவிர
எல்லையில்லாப் பெருவெளியிருக்கு! ’

mathi2k9@gmail.com
பதிவுகள், அக்டோபர் 2009 இதழ் 118

82. குறிப்பெழுதுங்கள் - ராம்ப்ரசாத்

தேன்பருகித்
தாவிவிடும் வண்டதின்
இயல்பு விளங்காமல்
வினவும் பதினாரு வயது
பருவப்பூவிற்கு
நினைவடுக்குகளில் அங்கொன்றும்
இங்கொன்றுமாய் சிதறிக்கிடக்கும்
வாழ்க்கைப்பாடங்களைக்
கோர்வையாய் சேர்த்துப்
பழகிடாத நிலையில்
விளக்கிச்சொல்லுவது எப்படியெனும்போதும்,

கட்டில் அடங்காத மனக்குரங்கை
அதன் போக்கில் விட்டு,
இன்றைய பொழுது
நம்பொழுது,
நாளையென்பது
பகல் கனவென்று,
காரணம் சொல்லி
சிற்றின்பங்களைக் கணக்கெடுக்கும்
இளந்தளிர்களுக்கு
வாழ்க்கையென்பது என்னவென்று
விளக்கிச்சொல்லுவது எப்படியெனும்போதும்,

இப்படி
பல்வேறு தருணங்களில்
கடந்து வந்த பாதைகளில்
கடந்து போன பாடங்களை
மீண்டும் படிக்க நேர்கையில்
தோன்றுகிறது,
நம் வாழ்க்கையைக்
குறிப்பெழுதியிருக்கலாமென்று...

marine_engineeruso@yahoo.com
பதிவுகள், அக்டோபர் 2009 இதழ் 118

83. புத்தக மயிலிறகாய்ப் பொத்திய... - வேதா இலங்காதிலகம் (ஓகுஸ், டென்மார்க்) -

புத்தக மயிலிறகான இதயத்தின் ராகங்கள்
பொத்திய எண்ணங்கள் வாசனைச் சுகந்தங்கள்.
தத்தித்தோம் போடும் தலைமுதல் கால்வரை
தித்திக்கும் ஐதிகள் இன்பத் திறவுகோலாகும்.
மொத்தமாய்க் காதலெனும் தத்துவ நாடிகள்
சத்தான வாழ்விற்குச் செங்கம்பளம் விரிக்கும்.

ஊன் பாகமாய் உயிரில் கலந்து
தேன் பாகாய் இனிக்கும் உயிர்க் காதல்.
கண்ணெனும் நுழைவாயிலால் பாய்ந்து
அன்பால் கனிந்து உயிரில் உரசும்.
ஒன்றாய் இணையும் உயிரின் தாளம்
கண்ணோடு நாளும் கவிபாடி வாழும்.

இசையும் சுரப்பிகளின் இனிய மென்னகை
அசைத்து நனைக்கும் உயிர் நதியை.
கிளுகிளுக்கும் இன்பத்தில் நெஞ்சம் கிறங்கும்.
தளதளக்கும் நேசத்தில் தனிசக்தி பிறக்கும்.
குளுகுளுக்கும் பிருந்தாவன நீரூற்றாகும் இன்பம்,
கிசுகிசுக்கும் உயர் காதல் சிறகுகளாகும்.

நிறம் கொஞ்சும் ரவிவர்மன் ஓவியமாய்
நினைவிருக்கும் வரை அரங்கேறும் காவியம்.
பிரபஞ்ச அழிவிலும் பிரிவற்ற காதல்
சுரம் கொஞ்சும் இராகமாளிகாப் பொழில்.
தரமுடை நினைவுத் தேனின் தேனடைகள்,
உரமான நினைவாற்றலில் நீந்தும் கனவுகள்.

ஒரு துளியாய் நானிருந்தேன் கிராமத்தில்.
பெரும் ஊற்றாம் உன் அன்புச் சாரலில்
திரு ஊற்றாயுன் விழி மொழியில்
ஒரு ஓடையாய் இன்று உருமாறினேன்.
உன்னருகு எனக்கு யானை பலமானது.
அன்ன பல கவிதை பின்ன வந்தது.

புத்தக மயிலிறகாய்ப் பொத்திய எண்ணங்கள்
நித்திலக் காதல் நிலவு வெளிச்சங்கள்
சத்தாகிக் கனதியற்ற கனவான நினைவுகள்.
பூவிடும் மகரந்தப் பூந்துகள்கள், பூவாணங்கள்,
காவிடும் பூம்பல்லக்குகள், கனகரதங்களாய்,
நீவிடும் வாழ்வை நீண்டினிய பயணத்திற்கு,

vetha@stofanet.dk
பதிவுகள், அக்டோபர் 2009 இதழ் 118

84. ரூசோவின் கவிதையொன்று!

வாசலை சுத்தம் செய்வதற்காய்
வந்து போகிறாய்
என் மனம் குப்பையாய் போகிறது..

நான் காத்திருக்கும் பொழுதுகளில்
வாசலை மட்டுமின்றி
வீதியையும் சேர்த்துப் பெருக்குகிராய் ..

உன்னால் ஒதுக்கப்பட்ட
குப்பைகள் கூட
குதூகூலமாய் ..

வெறுங்கைவிரல்களால்உன்
வாசல் கதவை மூடிவிட்டு
கண்களால்
என் வீட்டு வாசல்
கதவை திறந்து வைத்துப்போகிறாய்..!

marine_engineeruso@yahoo.com
பதிவுகள், அக்டோபர் 2009 இதழ் 118

85. விரிகின்ற தாமரையோ - சக்தி சக்திதாசன்

நித்தமொரு மாலையிலே
முத்தமிடும் வேளையிலே
சத்தமின்றித் தென்றலது
யுத்தமொன்று புரியுதன்றோ

மலரொன்றின் ஏக்கத்திலே
புலர்கின்ற மாலையிலே
துலர்கின்ற இன்பத்தினை
உணர்கின்ற தாக்கமது

இயற்கையின் கானத்தில்
கேட்கின்ற ராகத்தில்
பிறக்கின்ற சாரத்தில்
சுரக்கின்ற நாதமழை

நினக்கின்ற வேளையிலே
நனைக்கின்ற நினவுமழை
கனக்கின்ற சுமைகளெல்லாம்
மறக்கின்ற கோலமது

சிதறுமந்த எண்ணத்துளிகள்
சேர்ந்து ஒரு குட்டையாகி
மலர்கின்ற கவிதையது அதிலே
விரிகின்ற தாமரையோ

பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

86. யாதுமாகி - ப.மதியழகன் -

என் உள்ளக் கனலைத் தணிக்க
உனது ஓரவிழிப் பார்வை போதும்
ஊற்றாய் தண்ணீர்
என் நெஞ்சமெங்கும் கரைபுரண்டோடும்

என் சோர்வுகளை துரத்தியடித்து
விரக்தியை விரட்டியடிக்க
உனது கனிவான வார்த்தைகள் போதும்
எமனே வந்து எதிரில் நின்றாலும்
என் இதயம் எப்பவும் போல் ஓடும்

என் மன இருள் போக்கி
பிரகாசம் பொங்கும் ஒளிதீபம் ஏற்றிட
உனது சிறு நகத்தீண்டல் போதும்
நிலவுக்கு தன் கிரணங்களை கடன் தரும்
சூரியன் போல் பொன்னொளியால்
என் மேனி சுடர்விடும்

என் கனவுகள் நனவாக
உனது கால்தடம்
எனது வீட்டில் பதிந்தால் போதும்
தடைக்கற்களாய் நிற்கும் கற்பாறைகளையே
என் இரும்பு இதயம்
அலட்சியமாய்ப் புரட்டிப்போடும்

என் கற்பனை, சிறகுகள் விரிக்க
மயிலிறகாய் மனத்தை வருடும்
உனது அன்பான சிறுசொல் போதும்
வார்த்தைகள் வானத்திலிருந்து
அருவியாய் வந்து
எழுதுகோலில் குதித்து விளையாடும்

எனது ஆன்மச்சுடர் அணையாமலிருக்க
என்றென்றும் உனது அருகாமை ஒன்று போதும்
நதிவெள்ளம் போல் பல தொலைவுகளைக் கடந்து

லட்சியக்கடலில் ஓர் நாள் எனது ஜீவன் சங்கமித்து
இவ்வுலகம் நிலைக்கும் வரை
உந்தன் புகழ் பாடும்.

mathi2k9@gmail.com
பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

87. சுந்தரக் கனகநிலா - வார்த்தைகள். - வேதா இலங்காதிலகம் (ஓகுஸ், டென்மார்க்)

தொடர்பு இணைப்பை மனிதருள்
படர வைக்கும் வளையம்.
இடர்கள் தீர்த்து இன்பம்
படர்த்தும் வார்த்தைகள் பூக்கள்.
ஓர் எழுத்தாயும் இணை
சேர்த்துக் குழு நிலையாலும்
வார்த்தைகளில் அர்த்தம் உயிர்க்கும்.
வார்த்தைகள் கடல், மகா கடல்.

நேர்த்தியான வார்த்தைகள் கூட்டுச்
சேர்த்தால் இன்ப மொழிச்
சொர்க்கம் அருகிலே - இங்கேயே.
உதடுகள் பேசும் வார்த்தைகளை
உயிரான கண்களும் பேசும்.
தீர்க்கமான ஆசையில் பாசமாய்
போர்த்திய நேசக் கனகநிலா
வார்த்தைகள் உயிரை ஈர்க்கும்.

உணர்வுகளின் தாலாட்டில் அசைந்து
உதிக்கும் முத்துகள் வார்த்தைகளானால்,
பேசிடும் வார்த்தையின் ஒலியும்
உயிரை வருடும் இனிமையினால்.
வார்த்தை ஒலி இனிமையில்
கீர்த்தியும் நெருங்கும் அருகில்.
வார்த்தைகள் வனப்புக் குடையாக
நேர்த்தியான பிரசவமொரு இன்பத்தொல்லை.

சிந்தனை வெள்ளத்தால் படியும்
சுந்தர வண்டல்கள் வார்த்தைகள்.
மந்திரமாய் சீவராசிகளை வசமாக்கும்.
தந்திரமாக பந்தென பொய்களும்
யந்திர வார்த்தைகளும் உருளும்.
தூசி, பாசியுடை வார்த்தைகளால்,
ஊசியாய்ச் சொருகும் வார்த்தைகளால்

கூசி ஒதுங்குவோர் நல்லோர்.

vetha@stofanet.dk

பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

88. நகரத்துப் புறாவும், நானும்! - வ.ந.கிரிதரன் -

கவிதை வாசிப்போம்!
நள்ளிரவுப் பொழுதொன்றில்
'மான்ரியால்' பயணிப்பதற்காய்
நிற்கிறேன் நான் நகரத்துப் பேரூந்து
நிலையத்தே.
நள்ளிரவில் படுத்துறங்கும் புள்ளொன்று
என் முன்னே விரிந்திருந்த நகரத்துக்
காங்ரீட் பரப்பொன்றின்மீது வந்தமர்ந்தது:
மாடத்துப் புறா.
ஊர் தூங்குமிரவில், நள்ளிரவில்
சயனிக்கும் இந்தப் புள்ளும்
சஞ்சரிக்கும் மண்ணுக்கொப்ப
மாறிற்று போலும்.
நடப்பதும், பறப்பதும், கொத்துவதும்
மீண்டும் பறப்பதும், நடப்பதும்,
கொத்துவதுமென
நகருமதனிருப்பும்
வழக்கம்போல்
படைப்பின்
நேர்த்தியிலெனையிழந்த
என் நெஞ்சினைத் தாக்கின.
அண்ணாந்து பார்த்தேன்.
தொலைவில்
மதியும் சுடருமென இருளில்
விரிந்திருந்தது என்னைச் சுற்றிப்
படர்ந்திருந்த பெருவெளி.
உள்ளும்
விரிந்திருந்த அவ்வெளியின்
விரிவுற்குள்
நடனமாடிடும் அடிப்படைத்
துகள்களின்
ஆட்டமுமெனை மயக்கிட
நினைத்தேன் நான்
இருப்பினைத் தக்க வைப்பதற்காய்
இங்குளைவது

அந்தப் புள் மட்டுந்தானா?
அச்சமயம்
இயங்கும் வெளியுமதன் விரிவும்
இருப்பினாட்டத்தில்
விளையும் பொருளும் கண்டு
அதிசயித்தேன்..
இங்கு விரிவதும், அசைவதும்,
உதிப்பதும் , மறைவதும், பயனாய்
விளைவதும், உளைவதனைத்துமே
உணர்வினுள்ளதொன்றா? அன்றி
அப்பாலுமுள்ளதுண்மையா?
நள்ளிரவில், நகரத்துப் பேரூந்து
நிலையமொன்றின்
நடைபாதையில்,
நகரத்துப் புறாவொன்றின்
நகர்வென் சிந்தையிலேற்றிய
பொறியுடன் தொடர்ந்தேன்
என் பயணத்தை.

பதிவுகள், டிசம்பர் 2009 இதழ் 120

89. நாங்க கூட... - சு.திரிவேணி,கொடுமுடி -

எங்க ஊரிலயும் ஆறு இருந்துச்சு.
ஆத்துல குளிச்சா பாவம் போவுமாம்!
யாரு பண்ணுன பாவமோ?
ஆறே போயிடுச்சு!
செத்துப் போன ஆத்தைப் பாக்க
மனசெல்லாம் எரியுது.

தண்ணியில்லாம வெடிச்சுப்போன
நிலத்துல பயிரை நட்டு வெக்கலாம்.
அடிக்கிற வெக்கையில அஞ்சாறடி
மனுசங்களே பொசுங்கிப் போகையில
மூணு கால் வேர்ல உசுரை வெச்சுருக்கற
செடி எந்த மூலைக்கு?

சொட்டுத் தண்ணியில்லாம சாகறோம்
இல்லைனா சுனாமியால சாகறோம்
சாகத்தான் நாங்க பொறந்திருப்பமோ??

பொட்டுத் தண்ணி ஊத்தி
ஒத்தப் பயிர வளக்க முடியாம
செத்துப் பொழைக்கறோம்.
கலர்கலரா சாயங்கலந்து
பாட்டில்ல ஊத்திக் குடிக்க விக்கறாங்க!
இவங்களுக்கு மட்டும் எங்கிருந்து தான்
இவ்வளவு தண்ணி கிடைக்குது?

மண்ணப் பத்திக் கவலையில்லாம...
மரத்தப் பத்திக் கவலையில்லாம...
மானத்தப் பத்தியும் கவலையில்லாம...
சொரண கெட்டுப் போயி சீவன் செத்துப்
பொணமாப் பொழைக்குறொம்.

அக்ரி படிச்சவங்களே ஆபீசுக்குதான் ஓடறாங்க.
கசங்காத சட்டை வேர்க்காத வேலைனு
எங்க புள்ளைங்கள நாங்களே

கழனிய உட்டுப் போக வெச்சோம்.
ஆத்தா ரத்தத்த உறிஞ்சிக் குடிச்சு
அவள அனாதையா தெருவுல விட்ட மாதிரி
எங்க பூமிய நாங்களே கை வுட்டோம்.
ஆத்தாவோட சாபம் தான்
சுத்தியடிக்குது போல...

என்னமோ போங்க...
நாங்க கூட இந்த வருசம்
பொங்கல் கொண்டாடுறோம்.
பொங்கப் பானைலருந்து அதுல
கட்டுற மஞ்சள் வரைக்கும்
கடன் வாங்கிச் சந்தோசமா
பொங்கல் வெக்கிறோம்.

ஏன்னா...
எங்க ஊர்ப் பொங்கல
டி.வி காரங்க
படம் புடிக்கப் போறாங்களாம்!!

kmdveni@gmail.com
பதிவுகள், ஆகஸ்ட் 2010 இதழ் 128

90. உயிர் பிழைத்திருப்பதற்காக.... - சோ.சுப்புராஜ் -

வீட்டு வாசலுக்கே கொண்டு வந்து
வியாபாரம் செய்யும் கூடைக்காரிகளிடம்
விருப்பத்துடன் வாங்குங்கள்
பேரம் பேசியேனும்
விலை கொஞ்சம் அதிகமென்றாலும்......!

கையேந்தும் மூன்றாம் பாலினத்திற்கு
காசு போடுங்கள் மறுக்காமல்
அவர்களின்
உழைப்பை மறுதலித்த சமூகத்தின்
அங்கம் தானே நாமெல்லாம்.....!

இரயில் வண்டியின் இரைச்சலையும் மீறி
கூவிக் கூவி விற்கும்
கண்ணொளி இல்லாதவர்களிடம்
கனிவுடன் ஏதாவது
வாங்குங்கள் அவ்வப்போது........

வழிபாட்டுத் தலங்களுக்குப் போனால்
கடவுளுக்குக் காணிக்கை போடாவிட்டாலும்
வாசலில் காத்திருக்கும்
பிச்சைக் காரர்களுக்கு
ஏதாவது கொடுக்க மறக்காதீர்கள்.....!

சின்ன இரும்பு வளையத்துக்குள்
உடலைக் குறுக்கி ஒடித்து வளைத்து
சிரமப்பட்டு நுழைந்து
வெளியேறும் சிறுமியும்
கொட்டடித்து குட்டிக்கரணம் போட்டு
வில்லாய் உடல் வளைத்தும்
விளையாட்டுக்காட்டும் சிறுவனும்
தட்டேந்தி வரும்போது
தவறாமல் காசு போடுங்கள்.....!

சின்னப் பிள்ளைகளின்

இரயில் விளையாட்டைப் போல்
ஒருவர் கொடுக்கை
ஒருவர் பிடித்தபடி
நெரிசலினூடே பாடியபடிக்
கடந்து போகும் குருடர்களுக்கு
கண்டிப்பாய் கொடுங்கள் ஏதாவது.....!

இவர்களெல்லாம்
உலக முதலாளிகளின் வரிசையில்
முதலிடம் பிடித்துவிடப் போவதில்லை;
இன்னும் கொஞ்ச நாள்
உயிர்த்திருக்க அவர்களுக்கு
உதவலாம் உங்கள் பணம்.....!

engrsubburaj@yahoo.co.in
பதிவுகள், ஆகஸ்ட் 2010 இதழ் 128

91. பிழைப்படிமங்கள்...- ராம்ப்ரசாத் சென்னை -

இரவுகள் நீண்டிருப்பதாய்
ஒரு குறிப்பெழுதிவிடுகிறது மனம்...
இரவுடன் பிரயாணப்பட
தலைப்படுகையில்...

இரவுகள் இதை எண்ணியெண்ணி
மௌனமாய் சிரிக்கின்றன
ஆழ்பிரபஞ்சம் போல...

தெளிந்த நீரோடைக்கடியில்
தெரியும் கூழாங்கற்களை ஒத்த
காட்சிப்படிமங்கள் காட்சிப்பிழையாகவும்
இருக்கலாமென்பதே உண்மை...

ramprasath.ram@googlemail.com
பதிவுகள், ஆகஸ்ட் 2010 இதழ் 128

92. நேசமென்னும் தென்றல்வர நெஞ்சத்தை திறந்திடுவோம்...!! - கவிஞர் பொத்துவில் அஸ்மின் -

இலங்கையர்கள் நாங்களெல்லாம் சகோதரர்கள் என்றிடுவோம்!
இசையோடு நாதம்போல் இணைந்தேநாம் நின்றிடுவோம்!
கலங்குவதால் பயனில்லை கவலைகளை கொன்றிடுவோம்!
விலங்குகளாய் விளங்காமல் விலங்குகளை வென்றிடுவோம்..!

உலகத்தின் ஐக்கியத்தை ஒன்றாகி நெய்திடுவோம்..!
உலர்ந்துநிற்கும் மனங்களுக்குள் மழையாக பெய்திடுவோம்..!
கலகத்தை காதலிக்கும் உணர்வுகளை கொய்திடுவோம்..!
களைவளர்ந்த பூமியிலே கலைவளர செய்திடுவோம்..!

நேசமென்னும் தென்றல்வர நெஞ்சத்தை திறந்திடுவோம்!
நேர்வழியில் பூப்பறித்து பாரினிலே சிறந்திடுவோம்!
சிரமம்தான் என்செய்ய கடந்தவற்றை மறந்திடுவோம்!
சிக்கல்களை விட்டுவிட்டு சிறகடித்து பறந்திடுவோம்!

சாதிமதம் பார்க்கின்ற சறுகுகளை உதைத்திடுவோம்!
சாத்தானின் சரித்திரத்தை குழிதோண்டி புதைத்திடுவோம்!
சாந்தியினை ஊர்கூடி உலகெங்கும் விதைத்திடுவோம்!
சண்டையிட்டு சரிந்தவர்கள் உளம்திறந்து கதைத்திடுவோம்..!

அடிமைக்கும் மிடிமைக்கும் கொடுமைக்கும் கொள்ளிவைப்போம்!-எம்மை
அழவைக்கும் விழவைக்கும் தவறுகளை தள்ளிவைப்போம்!
புரிந்துணர்வு கோலமிட புன்னகையால் புள்ளிவைப்போம்-நாம்
புரிந்துகொண்ட சேதிகளை பூக்களுக்கும் சொல்லிவைப்போம்..!

எம்நாடு முன்னேற எம்மவர்கள் சேரவேண்டும்!
நம்நாடு இலங்கையென நம்மவர்கள் கூறவேண்டும்!
கண்ணோட வலிதந்த காயங்கள் ஆறவேண்டும்!
மண்ணோடு போய்விடமுன் மனதெல்லாம் மாறவேண்டும்!

எம்துயரம் இன்றோடு வீழவேண்டும்.
எமக்குள்ளே நல்லுறவு சூழவேண்டும்-நாம்
ஒருதோப்பு குயிலாக வாழவேண்டும்-எம்
ஒற்றுமையால் எம்தேசம் வாழவேண்டும்.

மண்ணாகும் வாழ்வினிலே மனமுவந்து விட்டுக்கொடு!
மாற்றானின் முயற்சிக்கும் துவேசமின்றி முட்டுக்கொடு!
இல்லாத மனிதருக்கு இருப்பதனை பெற்றுக்கொடு-நாம்
இலங்கையராய் வாழ்வதற்கு உன்குழந்தைக்கும் கற்றுக்கொடு..!

மடமைகளை துரத்திவிட்டு மனங்களினை வாசிப்போம்!
மறைந்திருக்கும் கலைஞர்களை மனமுவந்து ஆசிப்போம்!
இனமதங்கள் நாம்கடந்து தாய்நாட்டை நேசிப்போம்.!
இருக்குவரை இறக்கும்வரை தமிழ்மொழியை சுவாசிப்போம்...!!

vtvasmin@gmail.com
பதிவுகள், ஜூலை 2010 இதழ் 127 -

93. வேர்களே நீவீர் காலம் வரும் வரை கலங்காதிருப்பீர்! - மட்டுவில் ஞானக்குமாரன் (இலங்கை) -

விட்டில் போலானவரென்றும்
மரணத்தை வலிந்திழுத்து இருந்த இடம் தெரியாது
உரிகிப்போயினரென்றும்
ஆளாளுக்கு ஒரு அறிக்கையினை
அவிழ்து விடுகிறது
உலகம்.....!

நம்பிக் கெட்டது
நமது பிழை என்றும்
நடுத் தெருவிலே விட்டது
அவர்களின்
சாமத்தென்றும்
இழுக்குகளையும் அழுக்குளையும்
அச்சேற்றிக் கொண்டாடுகிறது கிழக்குலகம் ....

தேனெடுப்பதற்காக
ஈக்களைக் கொல்லலாம் என்றும்
படுகொலை
செய்தால்தான் அரசியலில் வெல்லாம்
என்றும் நிறுவியிருக்கிறார்களாம்.

புறாக்களை
சிறை செய்துவிட்டு வெடிகொழுத்தப்படுகிறது
புலுனிக் குஞ்சுகளைக் கொன்றுவிட்டு
பால்சோறு தின்னப்படுகிறது ....!

மசுக்குட்டிகள் என்று ஒதுக்கியிருக்கக் கூடாது
வண்ணாத்துப் பூச்சிகளுக்கான வாய்பினை
கொடுத்து
உலகை அழகுபடுத்தியிருக்கலாமே ...?

சோழனின் தேருக்குக் கீழே
விழிபிதிங்கிச் செத்ததெல்லாம்
பசுக்கன்றுகள் தானென்பதை

ஆராட்சி மணிகள் ஏன் சொல்லத் தயங்குகின்றன...?

உமது இந்த மௌனத்தைக்காட்டிலும் கூட
நரகத்திலே போய்
பிழைத்துக் கொள்வாயென்று
நீவீர் சபித்திருக்கலாமே.

பீறி வரும் எங்கள் குரல்
உங்களுக்கு
கேட்டிருக்க வாய்ப்பில்லை
ஏன் எனில் எங்கள் சத்தங்களை எல்லாம்
நுரையீரலுக்குள்ளே அல்லவா
சிறைவைத்திருக்கிறார்கள்.

ஒரு கவளம் சோறும்
ஒரு கோப்பை நீரும் கிடைக்கிறது ஒன்றாக.
இது தானிங்கு சுதந்திரம் எனக்
கற்பிக்கவும்படுகிறது

முப்பது வருட
வேளாண்மையின் அறுவடை இதுதானா

சிறைக்கூடமும்
கைவிலங்கும் தேவைக்கதிகமாகவே
இங்கே சிதறிக்கிடக்;கிறது.
ஆதலால் இங்கே எந்தக் கோரிக்கையையும்
உரத்து முன்வைக்க முடியாது.

தேர்தல் திருவிழா களைகட்டிக்கிடக்கிறது.
வாக்காளரைக்காட்டிலும்
வேட்பாளரின் தொகையே நிரம்பி வழிகிறது

கோரிக்கையோ
கொள்கையோ எதுவுமில்லை.
ஆனாவில் இருந்து அரசியல் செய்யப் போவதாகவும்
அயல் நாட்டானிடம்
பிச்சையை

வாங்கி வரப்போவதாகவும்
கதைகளை அவிழ்த்து விடுகிறார்கள்.

ஊரிமை கேட்டு உழைத்தவன்
களைத்து விழுந்திருக்கிறான்.
அப்புக்காத்துகள்
ஆசிரியன் தொடக்கம்
கூத்துப் போட்டவன்
கதை எழுதியவன் வரையிலும்
வரிசை கட்டி வாக்கைக் கேக்கிறான்.

நாத்து நட்டவனுக்கு கஞ்சியில்லை
கூலிக்காரனுக்கோ
எதுவும் மிஞ்சவில்லை
இந்த லட்சணத்திலே தான் வீடு வந்து
வாக்குக் கேக்கிறான்.

துன்பச் சிலுவையை கழுவுவவே
இங்கே கவிதை
எழுதுகிறோம்.

அரசனைப் புகழ்ந்து
எழுதி
அவனது பாதம் கழுவி
விழும் பொன்னாடையினைக்காட்டிலும்
துயரம் சுமப்பவருக்காக
எழுதும் போது வீழ்கின்ற
கண்ணீரின் வெகுமதிக்கு கனதி அதிகம் தான்.....

யாராயினும் வந்தினி
எமது விதி எழுதிச் செல்லலாம் என்றான பின்னே
உல்லாசத் தேரிலேறி வருகிறார்கள்.
தெருப்போட்டு தருவதாகவும்
வீடு நோக்கி மாவலி வருவதாகவும்
உறுதி தருகிறார்கள்.

எதைச்சொல்லி

எமை ஏமாற்றலாமென்று அவரகளுக்கு
நன்றாகவே தெரிகிறது

சிறைகளுக்குள்ளும்
முள்வேலித் திரைகளுக்குள்ளும் காத்திருப்பவரே
காலம் தன் பாட்டிலே வந்து
தீர்ப்பெழுத வரும்
அதுவரை
வேர்களே நீவீர் கலங்காதிருப்பீர்

maduvilan@hotmail.com
பதிவுகள், ஜூலை 2010 இதழ் 127

94. செம்மொழி பேணுவோம் எழுவீர் - காரையூர்க் கவிஞர் (கனடா)-

செம்மொழி என்றே பார்புகழ் படைத்த தமிழை
எம்மொழிக்கும் சரிநிகராய் தலைநிமிர்ந்து தரணியில்
செம்மார்நது இறுமாந்திடப் புலம்பெயர் தமிழரெலாம்
நம்தமிழ் பேசிடுவோம் நற்றமிழ் போற்றிடுவோம்.

செம்மொழி முத்தமிழாய் தடம்பதித்து வளர்கதை
செம்பாகமாய் நாடறியும் சான்றுடனே இவ்வுலகை
நம்மினத்தின் இணையத்தளம் இசைத்தே ஏகமாக்கும்
விம்மிதத்தால் தென்றமிழும் நாலாய் மலர்ந்ததுவே.

கற்றவர் கேட்டவர் கவிஞர் பாடகர் நாடகர்
மற்றவர் எல்லார்க்கும் அமிழ்தாய் உருசித்திடும்
நற்றமிழில் பேணுவதும் பாடுவதும் எழுதுவதும்
கற்றவர் தங்கள் கடனெனக் கொள்வோமே!.

செம்மொழி என்றுயர் செவ்வியுடை நம்மொழியை
எம்மவர் ஓம்புதல் இயற்றை யென்றிடுவோம்
செம்மொழி மகாநாடு கூட்டிடுவோம் பூமியிலே
எம்மொழி பார்தனில் ஏற்றம் பெற்றிடவே.

புலம்மாறிய தமிழாநின் பேச்சும் மூச்சும்
புலம்பெயரினும் நிலைபெயராமல் நித்தமும் நிலவிட
நலம்பாடி டுவோம் நாடெல்லாம் பரப்பிடுவோம்
கலங்கரை விளக்கமாய்க் கன்னித்தமிழ் ஒளிரட்டுமே.

செம்மொழி எங்கள் தாய்மொழி எனவே
விம்மிதம் எய்திடுவோம் வித்தைகள் கற்போம்
நிம்மதி யடைந்தே நித்தமும் மகிழ்வோம்
அம்மையும் அப்பனும் ஆதரவு நல்குவரே.

balasundarame@yahoo.com
பதிவுகள், ஜூலை 2010 இதழ் 127

95. கனவுதானா தோழா ! - சக்தி -

விடிவு வரும் !
விடிவு வரும் என்றே
நதிக்கரையோரம்
நடந்து கொண்டே நான் ....

எத்தனை இரவுகள் வந்தன ?
அத்தனையும் விடிந்தன ....
தோழா .... நம் வாழ்க்கையில்
வந்ததா விடிவு ?

கேள்விகள் மட்டும் தான்
எம் நெஞ்சில் எழலாம்
விடைகள் மட்டும்
யார் யாரோ கைகளில் ...

ஒவ்வொரு வருடமும்
ஒவ்வோர் மே மாதம்
தவறாமல் உலகெங்கும்
ஊர்வலங்கள் .... அது மட்டுமா ?
உழைப்போர் அனைவருக்குமாய்
விழாக்களும் கேளிக்கைகளும்.....

தோழா !

நாம் மட்டும் தெருவோரத்தில்
அதே கூழுக்கும், கஞ்சிக்குமாய்
தினம் தினம் வாழ்வோடு போராட்டம்

கைவண்டி இழுத்த தழும்புகள்
தேய்ந்துபோன செருப்பின்
துவாரத்துக்குள்ளே தைத்திடும் முள்
குடிசை வந்தடைந்ததும்
ஆசையோடு அணைத்தேன் மகனை
அப்பா உன் கைகளில் உள்ள தழும்புகள்
உடலைச் சிராய்க்கின்றன

பசியின் சிணுங்கலை ஒர் கணம் மறந்து
வேறோர் சிணுங்கல் என் மழலைக்கு

உலையில் கொதிக்கும் நீருக்குள்
ஓர் பிடி அரிசியைப் போட
என் சட்டைப்பையில்
சிலலறை தேடும் ஆசை மனைவி

பள்ளியில் எழுதும் நோட்டுப் புத்தகத்திற்காய்
பணம் கேட்பதா? இல்லையா? என்று
தயங்கிக் கொண்டே திரைச்சீலைக் கதவோடு
கன்னத்தை உரசிக் கொண்டே
என் முகம் நோக்கும் மகள்

இன்று நேற்றல்ல
அன்று தொட்டு சமுதாயத்தின்
அடிமட்டத்தில் சுரண்டிக் கொண்டே
வாழும் எம் பெயரால்
மேதினக் கொண்டாட்டங்கள்

கனவுதானா தோழா ?

என்று நீயும் நானும்
விடியலைத் தேடி
நாளும் வாடி நிற்கும் இந்த
ஆற்றங்கரையில்
எம் துயர்களை மறந்து
ஆடுகின்றோமோ ? தோழா
அன்றுதான் நமக்கு மேதினம்

ssakthi@btinternet.com
பதிவுகள், மே 2010 இதழ் 125